விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

இராகம் 01 | தாளம் 34 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 22 திங்கட்கிழமை (06.08.2012) | பக்கங்கள்: பதினாறு






மட்டக்களப்பு நகரில் பல கிளைகளைக் கொண்ட பனை மரங்கள் காணப்படுகின்றன. மட்டக்களப்பு பஸ் நிலையம், சந்தை, பெண்கள் பாடசாலைக்கு அண்மையில் உள்ளன இந்தப் பனை மரங்கள். (படம் : தீவக நிருபர்)

## நாட்டின் மக்கள் தொகை 2,10,00000 தொலைபேசிகளின் எண்ணிக்கை 2,28,00000

"சுமார் இரண்டு கோடியே பத்து இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட எமது நாட்டில், இரண்டு கோடியே 28 இலட்சம் தொலைபேசிகள் பாவனையில் உள்ளன. இவற்றில் ஒரு கோடியே 90 இலட்சம் கைத்தொலைபேசிகளாகும். சுமார் 38 இலட்சம் நிலையான தொலைபேசிகளும் உள்ளன" என்று தொலைத்தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ரஞ்சித் சியாம்பலாப் பிட்டிய தெரிவித்தார். கொழும்பு, பத்தரமுல்ல ஜனகலாகேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



அமைச்சர் ரஞ்சித் சியம்பலபிட்டிய

ரெலிகொம் மனித வலுவூட்டல் நிறுவனத்தில் சுமார் ஆயிரம் பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. அங்கு உரையாற்றுகையிலேயே அமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய மேற்கண்டவாறு கூறினார்.

தற்காலிக மற்றும் சமயாசமய, அமைய ஊழியர்களாகக் கடமையாற்றிய சுமார் ஆயிரம் பேர் நிரந்தர ஊழியர்களாகச் சேர்க்கப்பட்டனர். சேவைக்கு 02

## இந்தியாவோடு யுத்தம் புரிய தயாரானார் முன்னாள் இலங்கை ஜனாதிபதி



### தற்கொலை செய்வேன் என்றும் மிரட்டினாராம் பிரேமதாசா

இலங்கையில் நிலை கொண்டிருந்த இந்தியப் படைகள் 1989ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29ஆம் திகதிக்கு முன்னர் தமது நடவடிக்கைகளை நிறுத்தாவிட்டால் தான் தற்கொலை செய்யப்போவதாக அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச பயமுறுத்தினாராம். இவ்வாறு 1980களின் பிற்பகுதியில் இலங்கையில் இந்திய உயர்ஸ்தானிகராகக் கடமையாற்றிய லால் மெஹ்ரோற்றா கூறினார்.

கடந்த வார இறுதியில் புதுடில்லியிலுள்ள சமூக விஞ்ஞானத்துக்கான இந்திய நிலையத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

1989ஆம் ஆண்டு ஜுலை இறுதிக்குள் இந்தியப் படை இலங்கையை விட்டு வெளியேறவில்லை என்றால் இந்தியாவோடு யுத்தம் புரிவேனென்று ஜனாதிபதி பிரேமதாசா மிரட்டினாரென்றும் லால் மெஹ்ரோற்றா கூறினார்.

அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தியின் விசேட பிரதிநிதியாக கொழும்புக்கு வருகை தந்திருந்த பி.ஜி.தேஷ்முக்குடன் நடந்த சந்திப்பின்போதே ஜனாதிபதி ரணசிங்கா பிரேமதாசா இவ்வாறான 02

## நீலன் ஞாபகார்த்த சுவரோவியம் மீது கழிவு ஒயில் வீச்சு

கொழும்பு கின்ஸி றோட் மற்றும் கின்ஸி ரெறஸ் சந்தியில் நீலன் திருச்செல்வத்தின் ஞாபகார்த்தமாக வரையப்பட்டிருந்த சுவரோவியத்தின் மீது கறுப்பு நிறத்திலான ஒயில் வீசி சேதப்படுத்தப்பட்டுள்ளது. 1999 ஆம் ஆண்டு ஜுலை 29ஆம் திகதி நீலன் திருச்செல்வம் படுகொலை செய்யப்பட்டார். தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான இவர் எம்.பி.யாகவும் இருந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை இரவு சுமார் பதினொரு மணியளவில் ட்ரக்கொன்றில் வந்தவர்களே நீலனின் சுவரோவியத்தின் 02

## ஆலய பிரசாதம் தொண்டையில் சிக்கி 4 வயதுச் சிறுமி மரணம்

கோயில் பிரசாதம் தொண்டையில் சிக்கியதால் நான்கு வயது சிறுமியொருத்தி பொகவந்தலாவையில் மரணமடைந்துள்ளார். சம்பவத்தில் பொகவந்தலாவை ஆரியபுர பகுதியைச் சேர்ந்த பாலன் அனுஷா எனும் நான்கு வயதுச் சிறுமியே உயிரிழந்துள்ளார்.

பொகவந்தலாவை கதிரேசன் கோயில் திருவிழா உற்சவத்தை தொடர்ந்து அங்கு வழங்கப்பட்ட கடலையையும் கற்கண்டையும் உண்ட சிறுமி திடீரென மூச்சுத் திணறி கீழே விழுந்துள்ளார்.

இவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற போது அச்சிறுமி உணவு தொண்டையில் சிக்கியதால் ஏற்கனவே உயிரிழந்திருப்பதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

## இஸட் புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நிவாரணம்

இஸட் புள்ளி கணிப்பீட்டின் போது அநீதி இழைக்கப்பட்ட மாணவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன் படி உயர் கல்வி தொடர்பில் விசேட வேலைத் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜாக்ஷ தெரிவித்துள்ளார்.

அண்மையில் வெளியிடப்பட்ட இஸட் புள்ளி கணிப்பீட்டு நடவடிக்கைகளின் போது எழுந்துள்ள பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதிக்கும், அனைத்து பல்கலைக்கழக உபவேந்தர்களுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடலின் போது ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது இஸட் புள்ளி கணிப்பீட்டு நடவடிக்கைகளின் போது அநீதி இழைக்கப்பட்டதாக 02

## உயர்தரப் பரீட்சை இன்று ஆரம்பம்

2012ஆம் ஆண்டுக்கான பொ.த உயர்தரப் பரீட்சைகள் நாடளாவிய ரீதியில் இன்று ஆரம்பமாகின்றன.

இந்தவருடம் புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்தில் இரண்டு இலட்சத்து 77 ஆயிரத்து 671 பேர் பரீட்சையில் தோற்றவுள்ளனர்.

இவர்களுக்காக நாடு முழுவதிலும் 2093 பரீட்சை நிலையங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இஸட் புள்ளி மீண்டும் வெளியிட்டதன் பின்னர் பரீட்சாத்திகள் பரீட்சையில் தோற்றுவதற்கு 02

## கிழக்கு தேர்தல் முடிவு, மனித உரிமை பேரவை தீர்மானத்துக்கு வலு சேர்க்க வேண்டும்

### இரா.சம்பந்தன் எம்.பி

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திற்கு வலு சேர்ப்பதாக கிழக்கு மாகாண சபை தேர்தலின் தீர்ப்பு அமைய வேண்டும் என தமிழ தேசிய கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை நகரின் புறநகர் பிரதேசமான பாலையூற்று - பூம்புகார் விளையாட்டு மைதானத்தில் சனிக்கிழமை 02

## ஒலிம்பிக் ரிக்கெட்டுக்கள் எங்கே?

இலங்கை லண்டன் ஒலிம்பிக் போட்டிகளுக்காக சுமார் 7 மில்லியன் ரூபா பெறுமதியான டிக்கெட்டுகளை வாங்கியுள்ள போதிலும் அந்த டிக்கெட்டுகளை 02

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்

# கிழக்குத் தேர்தல் : வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் இல்லை

"கிழக்கு மாகாணத் தேர்தலைக் கண்காணிக்க வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்கள் வரவழைக்கப் பட மாட்டார்கள். தேவையேற்பட்டால் தேர்தல் பிரசாரத்தின் இறுதிக் கட்டத்தில் சார்க் நாடுகளிலிருந்து கண்காணிப்பாளர்கள் அழைக்கப்படுவர்" என்று தேர்தல்கள் ஆணையாளர்கள் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார். கொழும்பு, ராஜகிரியவிலுள்ள தேர்தல்கள் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை அரசியல் கட்சிகளின் செயலாளர்களுடனான சந்திப்பின் போதே தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டார். கிழக்கு மாகாணத் தேர்தல் பிரசார நடவடிக்கைகளைக் கண்காணிக்க வெளிநாட்டுக் கண்காணிப்பாளர்களை வரவழைக்க வேண்டுமென்று தமிழ்க் கூட்டமைப்பும், ஐ.தே.கவும் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஒரு மாத காலத்தினுள் திணைக்கள சேவைக்குள்

## பணிப்பாளர் ஆர்.பி.பந்துல

இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் கீழ் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அனைவரும் இன்னும் ஒரு மாத காலத்தினுள் திணைக்கள சேவைக்குள் உள்வாங்கப்பட்டவுள்ளதாக இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் சட்டத்தரணி ஆர்.பி.பந்துல திலகசிறி தெரிவித்தார்.

சமுர்த்தி வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் சமுர்த்தி வங்கி செயற்பாடுகள் தொடர்பாகவும் வங்கிகளை கணனி மயப்படுத்துவது தொடர்பாகவும் ஆராயும் முகமாக சம்மாந்துறைப் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (04) நடை-பெற்ற சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடலின் போதே பணிப்பாளர் நாயகம் இவ்வாறு தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் ஏ.மன்சூர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், சமுர்த்தி அதிகாரிகளை ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் உள்வாங்குவதற்காக திவிநெகும என்ற புதிய திணைக்களத்தின் ஊடாக தமது பணிகளை மேற்கொள்வதற்கான சகல ஏற்பாடுகளும் சட்டரீதியான முறையில் முன்னெடுக்கப்பட்ட வருகின்றன.

திணைக்கள சேவைக்குள் உள்வாங்குவதற்கான சட்டரீதியான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டு அமைச்சரவையினது அங்கிகாரமும் பெறப்பட்டுள்ளது.

இது தற்போது பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன இன்னம் ஓர் இரு வாரங்களில் அனுமதி கிடைக்கப்பெறவுள்ளது. அனுமதி கிடைக்கப் பெற்றதும் சமுர்த்தி உத்தியோகத்தர்க ஒரு மாத்தினுள் திணைக்கள உத் தியோகத்தர்களாக பணியாற்றவுள்ளனர்.

வங்கிப்பணியாளர்கள் அனைவரும் திவிநெகும வங்கி என்ற வங்கியின் கீழ் செயற்படுவர் என அவர் மேலும் கூறினார்.

# மன்னார் நீதிமன்றத் தாக்குதல்: முக்கிய புள்ளிகள் தப்பினரா?

மன்னார் மஜிஸ்திரேட் நீதிமன்றின் மீது தாக்குதல் நடத்திய மூன்று முக்கிய சந்தேக நபர்கள் குறித்து மன்னார் மாஜிஸ்டுரெட்டுக்கு வழங்கிய அறிக்கையில் வேண்டுமென்றே இரகசியப் பொலிஸார் குறிப்பிடத் தவறியுள்ளனர் என்று மன்னார் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் சட்டத்தரணி ஈ.சி. பெஸ்டானோ குற்றஞ்சாட்டுகிறார். இவர்களில் ஒருவர் அமைச்சர் ரிசாட் பதியுதின் நெருங்கிய உறவினர்கள் என்றும், இன்னொருவர் அமைச்சரின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ்காரன் என்றும் மற்றைய நபர் ஒரு மௌலவி என்றும் அவர் தெரிவித்துள்ளர். இதற்கிடையில் மேலும் 26 சந்தேக நபர்களைக் கைது செய்யுமாறு மன்னார் மாஜிஸ் சிரேட் ஏ.ஜூட்சன் உத்தரவிட்டுள்ளார்.

# தரம் குறைந்த டீசல் வழங்கியசிங்கப்பூர் கம்பனிக்குத் தடை

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குத் தரம் குறைந்த எரிபொருளை விநியோகித்த விரோல் என்ற சிங்கப்பூர் கம்பனியின் கேள்விப் பத்திரங்களை இடைநிறுத்த இலங்கை பெற்றோலிய அதிகார சபை தீர்மானித்துள்ளது. இந்த நிறுவனம் வழங்கிய தரம் குறைந்த பெற்றோலைப் பாவித்த பஸ்கள், ரயில் கள் உட்பட பெருமளவு வாகனங்கள் பாதிப்புக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. தரம் குறைந்த டீசல் கையிருப்பு தொடர்பான விசாரணைகள் முடிவடையும்வரை கேள்விப் பத்திரங்கள் இடை நிறுத்தப்படும்.

# 24 மணித்தியாலயத்தில் 4 அரசியல்வாதிகள் கைது

நாட்டில் 24 மணித்தியாலங்களுக்குள் நான்கு அரசியல்வாதிகள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். அந்த வகையில், கைது செய் யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊட கப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அக்மீமன பிரதேசத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவரை, தனது கடமையை செய்யவிடாது இடையூறு ஏற்படுத்தியதன் காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியின் தென் மாகாணசபை உறுப்பினர் ஒருவரும் வைத்தியர் ஒருவர் மீது தாக்குதல் நடாத்தியதாக குற்றஞ்சாட்டப்பட்டு மத்தியமாகாண சுகாதார அமைச்சரும் (நேற்று 04) பதுளை பிரதேச நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பணியாளர் ஒருவரை கடுமையாக தாக்கிய சம்பவம் தொடர்பில் பதுளை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், கொக்கரள்ள, வலிமுன கந்த பிரதேசத்தில் பாதுகாப்பு வாகனம் ஒன்றின் மீது கல் தாக் குதல் நடாத்திய சம்பவம் தொடர் பில் ரிதியகம பிரதேச சபை உறுப் பினர் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## ஒலிம்பிக் ரிக்கெட்டுக்கள்...(தொடர்)

பெற்றுக்கொண்டவர்கள் யார் என்பது மர்மமாகவுள்ளது கொழும்பு ஊடகம் ஒன்று சந்தேகம் வெளியிட்டுள்ளது. முப்பதுக்கும் அதிகமானோருக்கு அன்பளிப்பு டிக்கெட்டுகளை இலங்கை தேசிய ஒலிம்பிக் குழு வழங்கியுள்ளதாக அவ் ஊடகம் தெரிவிக்கிறது.

எனினும் போட்டிகளில் இலங் கையர்கள் பங்குபற்றும்போது பார்வையாளர் அரங்குகளில் இலங்கையர்களை காண்பது அரிதாக இருந்தது.

7 மில்லியன் ரூபா பெறுமதியான டிக்கெட்டுகளை இலங்கை வாங்கியதாகவும் அவை விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் தேசிய ஒலிம்பிக் குழுவின் தலைவர் ஹேமசிறி பெர்னாண்டோ கூறினர்.

## இஸட் புள்ளியால் ...(தொடர்)

கூறப்படும் மாணவர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படாத வகையில் அவர்கள் தமது உயர்கல்வியினை பெற்றுக்கொள்வதற்காக பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்குவது தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## உயர்தரப் பரீட்சை இன்று...(தொடர்)

அனுமதி கோரியுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் தெரிவித் துள்ளது.

இதேவேளை 2011ஆம் ஆண்டு பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் வெளியான இஸட் புள்ளி பிரச்சினைகள் தொடர்பில் தாம் தொடர்ந்தும் அவதானம் செலுத்தி வருவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இசெட் புள்ளி மீண்டும் வெளியிடப்பட்ட காலப் பகுதியிலிருந்து 1750 மாணவர்கள் அதற்கு எதிராக முறைப்பாடு செய்துள்ளதாகவும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக் காட்டியுள்ளது.

## நாட்டின் மக்கள் தொகை...(தொடர்)

இணைத்துக் கொள்ளப்பட்டவர்களில் 65 பேர் வடபகுதியைச் சேர்ந்த தமிழர்களாவர். பதினொரு பேர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம்களாவர். வரவேற்பு உபசரணையாளர் கள், தொழிலாளர்கள், பொறியியலா ளர்கள் உட்படப் பல்வேறு தரங்களைச் சேர்ந்த ஊழியர்கள் நிரந்தர மாக்கப்பட்டவர்களில் உள்ளடங்குவர்.

ஸ்ரீலங்கா ரெலிகொம் மனித வலுவூட்டல் நிறுவனத்தின் தலைவர் ரஞ்சித் ரூபசிங்க உட் பட மேலும் பல உயரதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## கிழக்குத் தேர்தல் முடிவு,...(தொடர்)

மாலை நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் கடந்த மார்ச் மாதம் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றிய தீர்மானத்திற்கிணங்க இலங்கை தனது கடமையை நிறைவேற்றியிருக்கின்றதா என்பது பற்றி வருகின்ற கார்த்திகை மாதம் மற்றும் 2013 மார்ச் மாதத்தில் மீண்டும் கூடி முக்கிய முடிவு எடுக்கவுள்ளது.

இத்தருணத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திற்கு வலு சேர்ப்பதாக கிழக்கு மாகாண சபை தேர்தலின் தமிழ் பேசும் மக்கள் அளிக்கவிருக்கும் தீர்ப்பு அமைய வேண்டும். கிழக்கு தமிழ் பேசும் மக்கள் கிழக்கு மாகாண சபை தேர்தலில் தவறிழைக்க கூடாது. அதிகார பகிர்வை எதிர்க்கும் ஆளும் கட்சியில் போட்டியிடும் தமிழர் ஒருவராவது வெற்றி பெறக்கூடாது.

வெற்றியீட்டும் தமிழர்கள் அனைவரும் தமிழ் தேசிய கூட்டமைப்பில் போட்டியிட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதை தமிழ் மக்கள் உறுத்திப்படுத்த வேண்டும். தவறின் சர்வதேச சமூகம் எமது விடயத்தில் உறுதியாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.

இந்திய உதவியுடன் விசேட பொருளாதர வலயம் ஒன்று திருகோணமலையில் அமைக்கப்பட விருப்பதாக கொழும்பு வந்திருக்கும் இந்திய வர்த்தக அமைச்சர் ஆனந்த் சர்மா தெரிவிததார். அவ்வாறு அமைக்கப்படும் பொருளாதார வலயம் கிழக்கு மாகாண சபை ஊடாக அமைக்கப்பட வேண்டும். அதற்கேற்ற விதமான ஆட்சி மற்றும் அதிகார பகிர்வு மாகாண சபைக்கு . பகிர்வு செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு கேட்பதற்கான உரித்தும் உரிமையும் எமக்கு உண்டு. தற்போது மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகார பகிர்வு போதுமானதாக இல்லை. தமிழ் பேசும் மக்களுக்கு நீதி மற்றும் நியாயம் வழங்கப்படுவதை தொடர்ந்தும் முடிவில்லாமல் மறுத்து கொண்டிருக்க முடியாது என்றார்..

## இந்தியாவோடு யுத்தம் புரிய...(தொடர்)

மிரட்டல்களை விடுத்தாராம். இந்தச் சந்திப்புகள் 1989ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12, 13ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெற்றன என்றும் மெஹ்ரோற்றா கூறினார்.

தான் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஏதாவது வழிமுறையை இந்தியா முன்வைத்து, தனது மக்களுக்கு அறிவிக்கத் தவறினால் அது தனக்குப் பெரும் பாதகமாக அமையுமென்றும், தனது அரசியல் செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளியாக அமையுமென்றும் பிரேமதாசா இந்திய உயர்ஸ்தானிகர் தேஷ்முக்கிடம் கூறினார்.

இந்திய அமைதி காக்கும் படையை இலங்கையை விட்டு வெளியேற்றுவதற்கு தான் எந்தளவு தூரத்துக்கும் செல்லத் தயா-ரென்றும், இலங்கைப் பாராளுமன்றம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ரத்துச் செய்தால் தான் கவலைப்படப் போவதில்லையென்றும் ஜனாதிபதி பிரேமதாசா கூறினாராம் இந்தியாவுடனான இலங்கையின் உறவுகள் சீர்குலைந்தாலும் பரவாயில்லை என்றும் கூறினாராம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டாவது வருட பூர்த்தி தினத்தன்று அதாவது 1989 ஜூலை 29ஆம் திகதி இந்தியப் படையின் வெளியேற்றம் குறித்து அறிவிக்க வேண்டும். இல்லையேல் இந்திய அமைதி காக்கும் படையை 'ஆக்கிரமிப்புப் படை' என்றுதான் பிர-கடனப்படுத்துவேன் என்றும் ஜனாதிபதி மிரட்டினாராம். இப்படிச் செய்தால் இந்தியாவுக்கு இருக்கும் நல்ல பெயர் கெட்டுப் போய் விடும் என்றும் ஜனாதிபதி சொன்னாராம்.

"இந்தியா அதன் மகிமை குறித்துப் பார்த்துக் கொள்ளும். அதுகுறித்துப் பிரேமதாசா கவலைப்படத் தேவையில்லை. 1990ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அதாவது ஜனாதிபதி விதித்திருக்கும் காலக்கெடு கழித்து ஒரு வருடத்தின் பின்னரே இந்தியப் படை வாபஸ் பெறும்" என்று தேஷ்முக் தெரிவித்தாரென்றும் மெஹ்ரோற்றா கூறினார்.

ஜூலை மாதம் 28ஆம் திகதி மெஹ்ரோற்றாவை ஜனாதிபதி சந்தித்துப் பேசியபோது நிலைமை மிக மோசமாகவும், பதற்றமாகவும் இருந்தது. "அடுத்த நாள் இந்தியப் படைகள் வாபஸ் பெறும் பணி ஆரம்பிக்கப்படவில்லை என்றால், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை நான் ரத்துச் செய்வேன். அத்துடன் இந்தியாவுடனான இராஜதந்திர உறவுகளையும் துண்டித்து விடுவேன்" என்றும் ஜனாதிபதி மிரட்டினார்.

ஜனாதிபதி ஆத்திரப்பட்டுக் கூறிய வார்த்தைகளை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த மெஹ்ரோற்றா, தான் விரும்பியபடி ஜனாதிபதி செய்யலாம். பேச்சுவார்த்தை இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண விரும்பினால் அதற்குத் தயார். எவ்வாறெனினும் ஜனாதிபதி யுத்தம் தான் வேண்டுமென்றால் அதற்கும் தயார்" என்று மெஹ்ரோற்றா கூறினார்.

இச்சம்பவம் குறித்து "இலங்கையில் எனது நாட்கள்" என்ற தனது நூலில் லால் மெஹ்ரோற்றா கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார். "இவற்றை நான் கூறியதும் மலர்ந்த முகத்துடனிருந்த ஜனாதிபதியின் முகம் திடீரென மாறியது அவர் கொண்டிருந்த நம்பிக்கையும் காணாமல் போனது" என்று குறிப்பிடுகிறார்.

தமிழ் போராட்ட ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்து விட்டு ஒருசில வாரங்களில் இந்தியா திரும்பும் நோக்குடனேயே ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் விசேட கோரிக்கையின் பேரில் இந்திய அமைதிகாக்கும் படை இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. புலிகள் இயக்கம் ஆயுதங்களைக் கையளிக்க மறுத்ததால் 32 மாதங்களாக இந்தியப் படை யுத்தம் புரிய வேண்டியிருந்தது. 1165 இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். 3011 பேர் காயமுற்றனர். ஒரு கட்டத்தில் 60 ஆயிரம் முதல் 80 ஆயிரம் வரையான இந்தியப் படையினர் இலங்கையில் நிலை கொண்டிருந்தனர்.

## நீலன் ஞாபகார்த்த...(தொடர்)

மீது கறுத்த ஒயிலையும், மணலையும் வீசி அசிங்கப்படுத் தினரெனப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

அவர் படுகொலை செய்யப்பட்ட சந்தியிலேயே இந்தச் சுவரோவியம் தீட்டப்பட்டிருந்தது. நீலனின் படுகொலையின் பின்னர் இனத்துவக் கற்கைகளுக்கான சர்வதேச நிலையம் மற்றும் சட்ட மற்றும் சமூக நம்பிக்கை அமைப்பு ஆகியவற்றில் அங்கம் வகிப்பவர்களே இந்தச் சுவரோவியத்தைத் தீட்டியிருந்தனரென்று சட்ட மற்றும் சமூக அமைப்பின் நிர்வாகப் பணிப்பாளரான செல்வி மாலா லியனகே தெரிவித்தார்.

# தமிழ் பேசும் சமூகங்கள் ஏற்கக்கூடிய வகையில் வடக்கு–கிழக்கு இணைப்பு

இரா.சம்பந்தன் எம்பி.

முஸ்லிம் மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் மீண்டும் வடக்கு - கிழக்கு இணைப்பைப் பெறுவதற்கு வழிவகுக்கும் வகையில் எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் வழங்கப்போகும் தீர்ப்பு அமைய வேண்டும் என்றும் அதனையே சர்வதேச சமூகம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

சனிக்கிழமை காலை மூதூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இறால்குழி என்ற தமிழ்க்கிராமத்தில் நடந்த தேர்தல் பிரசாரக் கூடத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்.

கடந்த வாரம் கொழும்பில் பதவி விலகிச்செல்லும் அமெரிக்கத் தூதரைச் சந்தித்து பேசினேன். இந்தியத் தூதரையும் சந்தித்து பேசினேன். அவர்கள் எவ்வாறு கிழக்கு மாகாண சபையின் தேர்தல் முடிவு அமையக்கூடும் என்று விசாரித்தார்கள். அரசாங்கம் ஓர் உள்நோக்கத்துடன் தான் கிழக்கு மாகாண சபைத் தேர்தலை அதன் ஆயுள் இன்னும் ஒரு வருட காலம் இருக்கையில் சபையை கலைத்து விட்டு தேர்தலை நடத்துகின்றது.



தமிழ் பேசும் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பின்னால் அணிதிரண்டுள்ளார்கள் என்பதை தேர்தல் முடிவு வெளிப்படுத்தும். இது உறுதியானதாகும் என்று அத்தூதர்களுக்கு தான் பதிலளித்தேன் என்றும் சம்பந்தன் மேலும் குறிப்பிட்டார்.

திருகோணமலை மாவட்ட தலைமை வேட்பாளர் சி.தண்டாயுதபாணி உட்பட பல வேட்பாளர்கள் மற்றும் திருகோணமலை மாவட்ட முன்னைநாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

## அமைச்சர் ரிஷாத்திடம் விசாரணை

அமைச்சர் றிஷாட் பதியுதீனிடம் மன்னார் சம்பவம் தொடர்பில் இரகசிய பொலிஸார் விசாரணைகளை நடத்தினர் என்று பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

அமைச்சரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை தொடர்பான முழுமையான அறிக்கை, இரகசிய பொலிஸாரினால் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

மன்னார் சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மேற்படி இரகசிய பொலிஸ் விசாரணை நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஏழு மாத காலத்தில் 16,000 பேர் டெங்கு நோயினால் பாதிப்பு

இந்த வருடத்தின் முதல் ஏழு மாத காலப்பகுதியில் மட்டும் டெங்கு காய்ச்சலினால் 16,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சுத் தெரிவித்துள்ளது.

டெங்கினால் இக்காலப் பகுதியில் 75 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடுமுழுவதிலும் ஒருப்பிட்டு பார்க்கையில் கிழக்கு மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோய்த் தாக்கம் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நூற்றுக்கு 48 வீதமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது என யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

2009 ஆண்டு இலங்கையில் டெங்கு நோய் புள்ளி விபரத்தில் யாழ்ப்பாணம் 3 இடத்தில் இருந்ததாகவும் தற்போது முழுமையாக டெங்கு இல்லாத மாவட்டமாக மாறியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள வாய்க்கால் மூலம் டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்தி வெளியாகியிருந்தது இது பிரதான வாய்க்காலாக இருக்கின்ற படியினால் இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் கூறினார்.

## அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

வவுனியாவில் ஏற்பட்ட அனர்த்தங்களின் போது பாதிப்படைந்த மாணவர்களுக்கான உதவிகளை இடர்முகாமைத்துவ அமைச்சு கடந்த சனிக்கிழமை வவுனியா மாவட்ட செயலகத்தில் வைத்து கையளித்தது.

இடர்முகாமைத்துவ அமைச்சு ஏற்பாடு செய்திருந்த இந்நிகழ்வில் பல்வேறு அனர்த்தங்களின் போது பாதிப்படைந்த மாணவர்களுக்கு நிதியுதவிகளையும் அனர்த்தங்களின் போது உதவிகளை செய்திருந்த இளைஞர் சேவைகள் மன்ற உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ்களையும் கிராம மட்ட அமைப்புகளுக்கான நிதியுதவியையும் பிரதேச செயலகங்களுக்கான சமையல் உபகரணங்களையும் வழங்கிவைத்தது.

இதன்போது இடர் முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர, வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பந்துல ஹரிச்சந்திர, செட்டிகுளம், நெடுங்கேணி, வவுனியா தெற்கு பிரதேச செயலாளர்கள் உட்பட வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஹேமந்த அதிகாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.





மல்லாகம் மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு பாடசாலை அதிபர் என்.சுப்பிரமணியம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தெல்லிப்பளை கல்விக்கோட்ட கல்விப் பணிப்பாளர் எஸ்சண்முககுலகுமார் கலந்துகொண்டார்.

(படங்கள் : வலிகாமம்)

## நெடுந்தீவில் 2 பாடசாலைகள் புனரமைப்பு

(வலிகாமம்)

அறிவை மையமாகக் கொண்ட அபிவிருத்தி இலக்குளை அடைந்து கொள்வதற்ககாக 5 ஆயிரம் ஆரம்பப் பாடசாலைகளும் ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளும் புனரமைக்கும் தேசிய நிகழ்சித் திட்டத்தின் கீழ் நெடுந்தீவு பிரதேச கல்விக்கோட்டத்தில் உள்ள இரண்டு பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுளள்ன.

நெடுந்தீவு மாவலித்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் நெடுந்தீவு சுப்பிரமணியம் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே புனரமைப் பணிகளுக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

## குளத்தில் மூழ்கி இளைஞர்கள் இருவர் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆயித்தியமலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உன்னிச்சைகுளத்தில் மூழ்கி இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில், இடம்பெற்ற இந்த சம்பவத்தில் காந்தி கிராமம் சின்ன ஊறணியை சேர்ந்த கலாவள்ளி பிரதீபன் (24 வயது), அம்மன் கோவில் வீதி, இருதயபுரத்தை சேர்ந்த ஜி.பிரியதர்ஷன் (27 வயது) ஆகியோரே உயிரிழந்ததாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் இருவரும் நண்பர்கள் எனவும் உல்லாசமாக சென்று குளித்துக்கொண்டிருந்த போது சுழியில் சிக்கி உயிரிழந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## தபால் திணைக்கள வாகனங்கள் பாதிப்பு

குறைந்த டீசல் பாவனையின் காரணமாக தபால் திணைக்களத்திற்கு சொந்தமாக 26 வாகனங்கள் பாதிப்படைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தபால் திணைக்களத்திற்கு சொந்தமான வான் உட்பட லொறிகள் 26உம் பாதிப்படைந்துள்ளதாக இலங்கை தபால் திணைக்கள தலைவர் ஜயந்த விஜயசிங்க தெரிவித்தார்.

இதன் காரணமாக அந்த வாகனங்களைப் பாவிக்க முடியாத நிலை தபால் திணைக்களத்திற்கு ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## மத்திய மாகாண சுகாதார அமைச்சர் கைது

மருத்துவர் ஒருவரை தாக்கிய குற்றச்சாட்டில் மத்திய மாகாண சுகாதார அமைச்சர் சுனில் அமரதுங்க கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

மருத்துவர் தாக்கப்பட்டமைக்கு எதிராகவும் அமைச்சரை கைது செய்யக் கோரியும் மத்திய மாகாண மருத்துவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

அதன்பின் அமைச்சர் சுனில் அமரதுங்க, சரணடைவதற்காக கண்டி பொலிஸ் நிலையத்திற்கு வந்தபோது அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

## இன்றைய இராசி பலன் (06.08.2012)

**நந்தன வருடம் ஆடித் திங்கள் 22 ஆம் நாள் திங்கட்கிழமை**

**நட்சத்திரம்** : உத்தரட்டாதி பின்னிரவு 1.50 வரை அதன்பின் ரேவதி
**திதி** : சதுர்த்தி காலை 8.30 வரை அதன் பின் பஞ்சமி
**சுபநேரம்** : 12.04 - 1.34 **இராகுகாலம்** : 7.34 - 9.04

**மேடம்** : வீண் செலவு, தொழில் மந்தம், யோசனை மிகுதி
**இடபம்** : பொருள் இலாபம், பிரயாசை மிகுதி, அந்நியர் உதவி
**மிதுனம்** : நற்செய்கை, தொழில் முயற்சி, நிலை மாற்றம்
**கடகம்** : பொருள் வரவு, தந்தை வழியால் நன்மை, இழந்த பொருள் கிடைத்தல்
**சிங்கம்** : உடல்நிலை பாதிப்பு, குற்ற உணர்வு, குடும்பச் சச்சரவு
**கன்னி** : எதிர்பாராத வரவு, நண்பர் உதவி, விவாக முயற்சி
**துலாம்** : கடன்சுமை, ரோகபயம், எதிரிகள் தொல்லை
**விருச்சிகம்** : தொழில் விருத்தி, புத்திரரால் சுகம், பணப் புழக்கம்
**தனுசு** : வாகன சுகம், தாய்வழியால் நன்மை, இல்லத்தில் சுபகாரியம்
**மகரம்** : சிறுதூரப் பிரயாணம், சகோதர சஞ்சலம், பயனற்ற முயற்சி
**கும்பம்** : பொருள் சேர்க்கை, வாக்குச் சித்தி, குடும்ப சுகம்
**மீனம்** : வீண் யோசனை, அரசபயம், சிரசு வயிற்று ரோகம்.

**- ஜோதிடர் பால.இரத்தினசேகர்**

# தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு
# தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர், தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான
# திறந்த போட்டிப் பரீட்சை - 2012

**தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச் சில் தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர், தரம் III பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட் டிப் பரீட்சைக்காக தகுதியுடைய இலங்கைப் பிரசைக ளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

2. தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகள் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையின் பெறுபேறுகள் மற்றும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் நடாத்தப்படும் முறைவழிப படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகள் ஆகியவற் றின் அடிப்படையில் திறமை ஒழுங்கின் பிரகாரம தேசிய ஒரு மைப்பாட்டு ஒருங்கி ணைப்பாளர் தரம் III பதவிக்கு நியமனம் செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்படுவர்.

3. நியமிக்கப்படவுள்ளவர்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுலுக்கு வரும் தினம் அமைச்சின் செயலாளரினால் தீர்மானிக்கப்படும். ஏதாவது ஒரு எண்ணிக்கையிலான வெற் றிடங்களை அல்லது சகல வெற்றிடங்களை யும் நிரப்பாமல் விடுவதற்கு அமைச்சின் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

**4. மாதாந்த சம்பள அளவு-**
ரூபா 13இ120 - 10 x 145 - 11 x 170 -10 x 240 - 10 x 320 - ரூபா 22,040.

5. இப்பதவி நிரந்தரமானது, அத்துடன் ஓய்வூதியத்தை கொண்டது.

**6. தகைமைகள்.-** தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப் பாளர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான தகைமைகள் கீழே தரப்படுகின்றன. விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள் ளப்படும் இறுதி நாளன்று அல்லது அதற்கு முதல் பதவிக்குரிய சகல தகைமைகளையும் பூர்த்திசெய்திருத்தல் கட்டாயமானதாகும்.

**6.1 கல்வித் தகைமைகள் :**

**(அ)** கல்விப் பொதுத் தராதரப்பத்திர (சாதாரண தரம்) பரீட்சையில் சிங்களம் / தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் அவற் றுடன் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன ஒரே தடை- வயில் ஆறு **(06)** பாடங்களில் சித்தியடைந் திருத்தல்.

**(ஆ)** கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர்தரம்) பரீட்சையில் ஆகக்குறைந்தது ஒரு பாடமாவது (சாதாரண பொதுப் பரீட் சையைத் தவிர) சித்தியடைந்திருத்தல்.

**6.2 தொழில் தகைமைகள்.-** சம்பந்தப்பட்ட துறையில் பெற்றுக்கொண்ட தொழில்சார் தகைமைகள் மேலதிக தகை மையாகக் கருதப்படும்.

**6.3** உடல்சார் தகைமைகள்.- ஒவ்வொரு விண்ணப்பதாரியும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பத விக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான சரீர மற் றும் மனரீதியான தகுதியை உடையவராக இருத்தல் வேண்டும்.

**6.4 வேறு :**
(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும.
(ii) விண்ணப்பதாரி அதிசிறந்த நற்குணமுடையவராக இருத் தல் வேண்டும்.

**6.5 வயதெல்லை.-** விண்ணப்பதாரியின் வயது விண்ணப்பங் கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளன்று 18 வருடங்களுக்கு குறையாத்தாகவும் 35 வருடங்களுக்கு மேற்படாததாகவும் இருத தல் வேண்டும்.

**7. பரீட்சை நடைமுறை:**

**7.1** எழுத்துப் பரீட்சை வினாத்தாள்கள் மூன்றை (03) கொண்ட தாக அமையும் இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் மொழி களில் நடைபெறும். விண்ணப்பிக்கும் பொழுது தெரிவு செய்யப் படும் பரீட்சைக்கான மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடம ளிக்கப்படமாட்டாது.

**7.2** இலங்கை பூராகவும் அட்டவணை I இல் குறிப்பிடப்பட் டுள்ள நகரங்களில் பரீட்சை நடாத்தப்படும். பரீட் சைக்கு தோற்றுவதற்காக விண்ணப்பிக்கும் நகரம் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. யாதாயினும் நகருக்கு விண்ணப்பிக் கும் பரீட்சார்த்திகளின் தொகை போதுமானதாக இல்லாதவ- டத்து அருகாமையில் உள்ள வேறொரு நகரத்தின் பரீட்சை நிலையத்துக்கு பரீட்சார்த்திகள் மாற்றப்படுவர். (கடமைக்குரிய கருமங்களை நிறை வேற்றுவதற்கான விண்ணப்பதாரிகளின் தகைமைகள் மற் றும் இயலுமை ஆகியனவற்றைப் பரீட்சித்துப் பார்க்கும் விதத்தில் இவ்வினாத்தாள் அமையும்.)

**7.3** பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகள் வெளியி டப்படுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மா னமே இறுதித் தீர்மானமாகும்.

**8. ஆட்சேர்ப்புத் திட்டம்.-**

(அ) எழுத்துப் பரீட்சை மற்றும் முறைவழிப்படுத்தப்பட்ட நேர் முகப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட் சேர்ப்பு மேற்கொள்ளப்படும். எழுத்துப் பரீட்சையில் 3 வினாத்தாள் களிலும் ஒவ்வொன்றுக்கும் 40. வீதத்துக்கு மேற்பட்ட புள்ளிக ளைப் பெறும் சகல விண்ணப்பதாரிகளும் முறைவழிப்படுத் தப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். ஒவ்வொரு விண் ணப்பதாரியாலும் எழுத்துப் பரீட்சை மற்றும் முறைவழிப்படுத் தப்பட்ட நேர்முக பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் கூட்டுத் தொகையின் அடிப்படையில் தயாரிக்கப்படும் திறமைப்பட்டிய லின் வரிசைக் கிரமத்தின் பிரகாரம் வெற்றிடங்களின் தொகை- கயை நிரப்பும் பொருட்டு ஆட்சேர்ப்பு இடம்பெறும். நியமனம் வழங் கப்படுவதற்குரிய நடவடிக்கைகள் முடிவுற்ற பின் சகல விண் ணப்பதாரிகளினதும் பெறுபேறுகள் பரீட்சைத் திணைக் களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்படும்.

**(ஆ) எழுத்துப் பரீட்சை, வினாத்தாள் மூன்றை (03) உள்ளடக்கும்:** வினாத் பாட நேரம் மொத்தப் தகுதி பெறு தாள் இலக்கம் புள்ளிகள் வதற்கான ஆகக் குறைந்த புள்ளிகள் மொழி 01 1 மணித்தியாலம் 100 41 இயலுமை சவாலுக்கு 02 1 மணித்தியாலம் 100 41 முகம் கொடுத்தல் விடயம் 03 1 மணித் தியாலம் 100 41 தொடர்பான கற்கை அறிவு.

**விடய பரிந்துரை :**
வினாத்தாளின் விடயப் பரிந்துரை
பெயர்

மொழி இயலுமை இவ்வினாத்தாள் விண்ணப்பதாரிகளின் கருத்து வெளிப்பாடு, விளங்கிக்கொள்ளல். எழுத்துக் கூட்டும் முறை மற் றும் இலகு இலக்கண பிரயோகம் தொடர்பான அறிவைப் பரீட்சித்துப் பார்க்கும் இலக்கு ரீதியான கேள்விகளைக் கொண்ட தாக அமையும். சகல வினாக்களுக்கும் விடை அளிக்கப்படல் வேண்டும். சவாலுக்கு முகம் இவ்வினாத்தாள் விண்ணப்பதாரியின் புள்ளிவிபர கொடுத்தல் இயலுமை, விவாதிக்கும் ஆற்றல், பொது அறிவு ஆகியனவற்றை மதிப்பீடு செய்யும் விதத்தில் தயாரிக் கப்படும் இலக்கு ரீதியான கேள்விகளைக் கொண்டதாக அமையும். சகல வினாக்களுக்கும் விடை அளிக்கப்படல் வேண் டும். விடயம் இவ்வினாத்தாள் இலங்கையில் மற்றும் சர்வதேச தொடர்பான மட்டத்தில் இடம் பெறும் சமகாலத்திய முக்கிய கற்கை நெறி நிகழ்வுகள், வரலாறு, கலாச்சாரம், இனப் பிரச்சி னைகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டைப் பேணுதல் ஆகிய துறைகள் தொடர்பான அறிவைப் பரீட்சித்துப் பார்க்கும்,லக்கு ரீதியான கேள்விகளைக் கொண்டதாக அமையும். சகல வினாக் களுக்கும் விடை அளிக்கப்படல் வேண்டும்.

**(ஈ) முறைவழிப்படுத்தப்பட்ட நேர்முகப் பரீட்சை:** பரீட்சித்துப் பார்த்து புள்ளிகள் ஆகக்கூடிய வழங்கப்படும் விடயங்கள் புள்ளி

1. மேலதிக கல்வித் தகைமைகள் 20
2. ஆங்கில மொழி அறிவு 20
3. தமிழ்/ சிங்கள மொழி அறிவு 20
4. கணனி அறிவு 10
5. தொழில் தகைமை 25

6.நேர்முகப் பரீட்சைக் குழு அனுமதித்தவாறு தலைமைத் துவம், ஆளுமை, செய்தித் தொடர்பாடல் ஆற்றல் 05

**9.தவறான தகவல்களுக்கான தண்டனை.-** விண்ணப்பப்படி வத்தை பூர்த்திசெய்யும் பொழுது மிகுந்த கவனத்துடன் பிழை யற்ற விபரங்கள் வழங்கப்பட வேண்டும். இப் பரீட்சையின் சட்ட திட்டங்களுக் கமைய விண்ணப்பதாரி எவ ரேனும் தகுதியற்றவ ரென காணப்படின் பரீட்சைக்கு முதல் அல்லது பரீட்சை நடை பெறுகையில் அல்லது பரீட்சையின் பின் அல்லது எச்சந்தர்ப் பத்திலும் அவரது விண்ணப்பதாரி அந்தஸ்தை இரத்துச்செய்ய முடியும். விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட விபரங்கள் எச்சந்தர்ப்பத்திலும் தவறானவை எனக் காணப்படின் அவர் அரச சேவை யிலிருந்து பணி நீக்கம் செய்யப்படலாம்.

**10. பரீட்சைக் கட்டணம்.-** பரீட்சைக் கட்டணம் ரூபா 500 ஆகும். இக்கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வரு மானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் இலங்கையிலுள்ள எந்த மாவட்ட செயலகத்திலோ அல்லது பிர தேச செயலாளர் அலுவலகத் திலோ செலுத்தப்படல் வேண்டும். அதற்காகப் பெறப்படும் பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்தில் இதற் கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கெட்டியாக ஒட்டப்படல் வேண் டும். பற்றுச் சீட்டின் நிழற்பிரதியொன்றை விண்ணப்பதாரி தம்வ சம் வைத்துக் கொள்ளல் உபயோகமானதாக அமையும். பரீட் சைக் கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டு விண்ணப்பதா ரியின் பெயரிலேயே பெறப்படுவது கட்டாயமாகும்.

11. விண்ணப்பப்படிவம் V4 (செ. மீ. 24 x 29) அள விலான தாள்களைப் பாவித்து-

**(அ)** இல. 1 தொடக்கம் 2.4 வரையான பந்திகள் முத லாம் பக்கத்திலும்,

**(ஆ)** இல. 3 தொடக்கம் தொடர்ந்து செல்லும் பந்திகள் ஏனைய பக்கங்களிலும் உள்ளடங்கும் விதமாக விண்ணப்பப்பத்திரம் தயா ரிக்கப்படல் வேண்டும்.

**(இ)** விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படும்பொழுது அதன் தலைப்பில் காணும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப் படிவத்தில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவத்தில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத திலும் குறிப்பிடப்படல் வேண்டும். சம்பந்தப்பட்ட விபரங்கள் தமது சொந்தக் கையெழுத்திலேயே தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். உரிய வகையில் விண்ணப்பப்படிவம் பூர்த்திசெய்யப் படாமையினால் ஏற்படும் நட்டத்தை விண்ணப்பதாரியே ஏற்றுக் கொள்ளல் வேண்டும். பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவத் தின் நிழற்பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்வது பிர யோசனமாக அமையும். பூர்த்திசெய்யப்படும் விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காணப்படும் விண்ணப்பப்படி வத் தின் பிரகாரம் அமைந்துள்ளதா என்பது தொடர்பாக விண் ணப்பதாரி விசாரித்து அறியவேண்டும். அவ்வாறு அமையாவிடின் விண் ணப்பம் நிராகரிக்கப்படலாம்.

**11.1** வர்த்தமானி அறிவித்தலில் காணப்படும் தகைமை களைக் கொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்களென முன்கூட் டியே எடுக்கப்படும் தீர்மானத்தின் அடிப்படையில் பரீட்சைக் கட்டணம் செலுத்தி நிர்ணயிக்கப்பட்ட தினத்தன்று அல்லது அதற்கு முன் விண்ணப்பத்தை அனுப்பிவைக்கும் சகல விண்ணப்பதா ரிகளுக்கும் போட்டிப் பரீட்சையில் தோன்றுவதற்காக அனுமதிப் பத்திரம் அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு செய்வதன் மூலம் பதவிக்கான தகைமைகளை விண்ணப்பதாரி கொண்டுள்ளார் என்பதை ஏற்றுக்கொள்வதாக கருதப்படமாட்டாது. விண்ணப் பதாரி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறி வித்தலின் பிரகாரம் தகைமைகளைக் கொண்டுள்ளாரா என்பதை ஆராயும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரி தேவையான தகைமை- களைக் கொண்டிருக்க வில்லையென கண்டறியப்படின் அவரது பரீட்சை விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படும்.

**11.2** விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர் தரம் **III** ,ற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

**11.3** விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க வித்தியாலயமொன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படை- களின் அதிகாரம்பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் கசெட் பண்ணப்பட்ட பதவிக்குரிய உத்தியோகத்தர், வருடாந்த சம்பளம் ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட தொகை- யக் கொண்ட அரச பதவியிலுள்ள நிரந்தர உத்தியோகத்தர் ஆகியோர்களில் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்

**11.4** பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பம் 2012.09.03 ஆந் தினத் தன்று அல்லது அதற்கு முதல் கீழ்க்காணப்படும் விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். **பரீட்சை கள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெல வத்தை, பத்தரமுல்லை.**

**12. பரீட்சைக்கு பிரசன்னமாக இருத்தல்.-** விண்ணப்பதாரி களுக்கு அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்பட்டவுடனேயே அதுபற்றி குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு (2) அல்லது மூன்று (3) நாட்கள் சென்ற பின் அனுமதி அட்டை கிடைக்கப் பெறாவிடின் அறிவித்தலில் சொல்லப்பட்டவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவிக்க வேண்டும். விண்ணப்பதாரிகள் தங்களுடன் வைத்திருந்த பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படி வத்தினதும் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டினதும் அத் தாட்சிப்படுத்தப்பட்ட நிழல் பிரதிகளையும், கொழும்பிற்கு அப் பாற்பட்ட பிரதேசமெனின் அனுமதி அட்டை அனுப்பி வைப்பதற் காக தொலைநகல் இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்பிவைக் கவுள்ள கடிதத்தையும் தம்வசம் வைத்துக்கொண்டு இலங்கை பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவித்தால் அது பயன்மிக் கதாக அமையும்.

**12.1** விண்ணப்பதாரியின் அடையாளத்தை உறுதிப்படுத்துவ தற்காக கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள சாதனங்களில் ஏதாவதொன்றை பரீட்சை மண்டபப் பொறுப்பதிகாரியிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

* ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லு படியான அடையாள அட்டை.

* செல்லுபடியான வெளிநாட்டு பயண அனுமதி அட்டை

**12.2** பரீட்சை நடைபெறும் தினத்தன்று பரீட்சை மண்டபப் பொறுப் பதிகாரியிடம் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது கையொப்பத்துட னான அனுமதி அட்டையை சமர்ப்பிக்க வேண்டும்.

**13.** விண்ணப்பதாரிக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்குவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளார் என் பதை ஏற்றுக்கொள்வதாக கருதக்கூடாது. பரீட்சையை நடாத்து தல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இயற் றப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் பெறுபேறு வெளியிடப்படுதல் சம்பந்தமாக எடுக்கப்படும் தீர்மானங்கள் ஆகியவற்றிற்கு பரீட் சார்த்திகள் கட்டுப்பட்டவர்களாவர். அவ்வாறான சட்டதிட்டங்கள் மீறப்படுமாயின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங் கப்படும். தண்டனைக்கு அவர்கள் ஆளாக நேரிடும்.

**14.** இங்கு குறிப்பிடப்படாத யாதாயினும் விடயங்கள் இருப் பின் அவை தொடர்பாக அமைச்சின் செயலாளரினால் தீர்மா னம் மேற்கொள்ளப்படும். சகல பரீட்சார்த்திகளும் இவ்வர்த்தமா னியில் வெளியிடப்படும் பரீட்சைகள் தொடர்பான பொதுச்சட்ட திட்டங்களின் பிரகாரம் செயற்படுவதற்கு கட்டுப்பட்டவர்களாவர்.

**எம். எஸ். விக்கிரமசிங்க, செயலாளர்,**
**தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு.**
**தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு,**
**இல. 40, புத்கமுவ வீதி, இராஜகிரிய.**

## அட்டவணை 1
### நகரங்களின் பெயர்ப்பட்டியலும் இலக்கங்களும்

| நகரம் | நகர இலக்கம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| கொழும்பு | 01 | வவுனியா | 13 |
| கம்பஹா | 02 | திருகோணமலை | 14 |
| களுத்துறை | 03 | மட்டக்களப்பு | 15 |
| மாத்தளை | 04 | அம்பாறை | 16 |
| கண்டி | 05 | புத்தளம் | 17 |
| நுவரெலியா | 06 | குருநாகல் | 18 |
| காலி | 07 | அநுராதபுரம் | 19 |
| மாத்தறை | 08 | பொலன்னறுவை | 20 |
| அம்பாந்தோட்டை | 09 | பதுளை | 21 |
| யாழ்ப்பாணம் | 10 | மொனராகலை | 22 |
| மன்னார் | 11 | கேகாலை | 23 |
| முல்லைத்தீவு | 12 | இரத்தினபுரி | 24 |
| | | கிளிநொச்சி | 25 |

## மாதிரி விண்ணப்பப்படிவம்

தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு
தேசிய ஒருமைப்பாட்டு ஒருங்கிணைப்பாளர், தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2012
The Open Competitive Examination for Recruitment to The Post of National Integration Co-ordinator Grade III - 2012 in the Ministry of National Integration and Social Integration

மாதிரி விண்ணப்பப்படிவத் தலைப்பில் காணப்படும் பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவத்தில் சிங்களத்துக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவத்தில் தமிழுக்கு மேலதி கமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

**(அலுவலக உபயோகத்துக்காக)**

பரீட்சைக்குத் தோற்றுவது எந்த மொழி மூலமாக :
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய எண்ணை அடைப்புக்குள் எழுதவும்.)

* வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பதாரி பரீட சைக்குத் தோற்ற உத்தேசிக்கும் நகரம் மற்றும் இலக்கம் ஆகி யவற்றை இங்கே குறிப்பிடவும். நகரம் நகர இலக்கம்
வர்த்தானி அறிவித்தலில் **(7.2 பந்தியைப் பார்க்கவும்)**

**1. 1.1** முதலெழுத்துக்களை பின்னால் எழுதி முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):
..........................................................................
உ-ம் : PERERA, A.B.C.
**1.2** முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):
..........................................................................
**1.3** முழுப்பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) :
..........................................................................
**1.4** தேசிய அடையாள அட்டை இலக்கம் :..............................
**1.5** பால் :..........................................................
பெண் - 1
ஆண் - 2
**2. 2.1** நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்):
..........................................................................
**2.2** நிரந்தர முகவரி (சிங்களத்தில்/ தமிழில்) :
..........................................................................
**2.3** அனுமதிப்பத்திரம் அனுப்பப்படவேண்டிய விலாசம் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :..........................................
..........................................................................
**2.4** தொலைபேசி எண் (இருப்பின்) :...................................
**3. 3.1** விண்ணப்பதாரி நிரந்தரமாக வதியும் மாவட்டம் :
..........................................................................
**3.2** பிரதேச செயலாளர் பிரிவு :.......................................
**3.3** வசித்து வரும் காலம் :...........................................
**3.4** கிராம உத்தியோகத்தர் பிரிவு :..................................
**4.** பிறந்த திகதி :
ஆண்டு :................. மாதம் :................. திகதி :................
2012.09.03 ஆந் திகதியன்று வயது :
வருடங்கள் :............. மாதங்கள் :............. நாட்கள் :.............

**5. கல்வித் தகைமைகள் :**
**5.1** க. பொ. த. (சா. தரம்) பரீட்சை தொடர்பான விபரம் :
(i) பரீட்சை வருடம் மற்றும் மாதம் :..............................
(ii) பரீட்சை எண் :..................................................
(iii) பெறுபேறுகள்:....................................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 01............... | ............... | 06............... | ............... |
| 02............... | ............... | 07............... | ............... |
| 03............... | ............... | 08............... | ............... |
| 04............... | ............... | 09............... | ............... |
| 05............... | ............... | 10............... | ............... |

**5.2** க. பொ. த. (உ. தரம்) பரீட்சை தொடர்பான விபரம் :
(i) பரீட்சை வருடம் மற்றும் மாதம் :..............................
(ii) பரீட்சை எண் :..................................................
(iii) பெறுபேறுகள் :...................................................

| பாடம் | தரம் |
|---|---|
| 01........................ | ................ |
| 02........................ | ................ |
| 03........................ | ................ |
| 04........................ | ................ |

**6. தொழில் தகைமைகள் :**
(i) ..........................................................................
(ii) .........................................................................
(iii) ........................................................................

**7.** நீர் எச்சந்தர்ப்பத்திலாவது யாதாயினும் குற்றச்சாட்டிற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீரா ?
**ஆம் இல்லை**
(ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடுக) ...................................

(7 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ்.ஆஸ்பத்திரி பிரேத அறையில் ஒரே நேரத்தில் 24 சடலங்கள்

யாழ்.ஆஸ்பத்திரியில் பழுதடைந்து காணப்பட்ட நான்கு குளிர்சாதனப் பெட்டிகளும் திருத்தப்பட்டுள்ளதால் ஒரு தடவையில் 24 சடலங்களைப் பழுதடையாமல் வைக்கக் கூடிய வசதி ஏற்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவின் செயலா- ளர் இத் தகவலை வெளியிட்டுள்ளனர். இந்த வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா எடுத்த முன் முயற்சியின் மூலமே பழுதடைந்த குளிர்சாதனப் பெட்டிகள் திருத் தப்பட்டு, பிரேதஅறை ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# உயர் தொழில்நுட்பவியல் மாணவர்கள் வகுப்புக்களை பகிஷ்கரிக்கின்றனர்

"கடந்த 02.06.2012 அன்று வழங் கப்பட்ட பட்டதாரி பயிலுநர் நியமனத்தில் எமது நிறுவனத்தில் பட்டம் பெற்ற அனைத்து மாணவர்களும் வடமாகாணத்தில் மட்டுமே புறக்கணிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக தற்போது கல்வி கற்றுக் கொண்டிருக்கும் நாம் மேற்படி பிரச்சினைக்கு விடிவு வரும்வரை வகுப்புக்களை முற்று முழுதாக புறக்கணித்து பாதுகாபபின் நிமித்தம் அவரவர் வீடுகளில் இருந்தே தொடர் கவனயீர்ப்பு போராட்டம் நடத்துவதென தீர்மானித்துளளோம்".- இவ்வாறு உயர் தொழில்நுட்ப வியல் மாணவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

முன்னதாகக் கல்லூரி வாசலில் தொடர்ந்து போராட்டம் நடத்துவதாக இருந்த போதும் நிர்வாகம் மற்றும் பொலிஸாரின் மிரட்டல் காரணமாக பாதுகாப்பு கருதியே அவரவர் வீடுகளில் இருந்தே பகிஷ்கரிப்பை நடத்தத் தீர்மானித்துள்ளோம். அவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் வருமாறு:

எல்லா அரச நியமனங்களிலும் வழமைபோல தொழில் நுட்ப மாணவர்களும் உள்வாங்கப்பட வேண்டும். நான்கு வருடமாக இருந்த HNDM மாணவர்கள், தற்போது 3 வருடம் ஆக்கப்பட்டிருப்பதால் எவ்வித வேலைவாய்ப்புமின்றி நிர்க்கதியாகியுள்ளனர். அவர்களுடைய கற்கை நெறியை 4 வருடமாக மாற்ற வேண்டும்.

HNDE (English), HNDIT பாடநெறியாளர்களுக்கு உரிய வகையில் தொழில் வாய்ப்பை உறுதி செய்யவும்.

இவ்வாறு பல கோரிக்கைகளை முன்வைத்து உயர் தொழில் நுட்ப வியல் மாணவர்கள் பகிஷ்கரித்து வருகின்றனர்.

# மரமுந்திரிகை செய்கையாளர்: பிரதேச செயலகம் விபரம் திரட்டல்

**சண்டிலிப்பாய்**

மரமுந்திரிகை செய்கை பண்ண விரும்புகின்றவர்களின் விபரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மரமுந்திரிகை செய்கையினை மேற்கொள்ள விரும்புவர்களின் விபரங்கள் கிராம அலுவலர்களினால் திரட்டப்பட்டு வருகின்றன.

யாழ். மாவட்டத்தில் மரமுந்திரிகை செய்கையினை ஊக்குவிக்கும் நோக்கில் செய்கையாளர்களுக்கான ஆலோசனைகள், உதவிகள், மானியங்கள் என்பன வழங்கும் நோக்கிலேயே இவ் விபரங்கள் திரட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றன.

ஆர்வம் உள்ளவர்கள் கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

# பாரதி வித்தியாலய அதிபருக்கு மணிவிழா

**கிளிநொச்சி**

கிளிநொச்சி பாரதி வித்தியாலய அதிபராக ஒன்பது வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய கே. இராஜேந்திரத்தின் மணிவிழா வைபவம் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

இதன்போது இவ் வித்தியாலய ஸ்தாபக அதிபர். அ. கனகரத்தினம் உட்பட வலய கல்விப் பணிப்பாளர் பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கிராம அலுவலர்கள், பெற்றோர் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் பொது மக்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

அதிபர் இராஜேந்திரத்தின் சேவையை கௌரவித்து மணிவிழா மலரும் வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதி பாரதிபுரம் என்பது குறிப்பிடத்தக்கது.

# சண்டிலிப்பாயில் சிறுவர் கண்காணிப்புக் குழுக் கூட்டம்

**சண்டிலிப்பாய்**

சண்டிலிப்பாய் பிரதேசத்தில் சிறுவர் குழுக் கூட்டம் நாளை 7 ஆம் திகதி காலை 10 மணியளவில் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சண்டிப்பாய் பிரதேச செயலர் எஸ்.முரளீதரன் இடம்பெறும் இக் கூட்டத்திற்கு கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், பொலிஸ், சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளை பொலிஸார் மதிப்பதில்லை

தேர்தல் ஆணையாளரினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகைள பொலிஸார் மதித்துச் செயற்படவில்லை என கபே என்னும் முன்னணி தேர்தல் கண்காணிப்பு அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

ஏறாவூர் தபால் நிலையத்தின் திறப்புக்களை ஒப்படைக்குமாறு ஏறாவூர் பொலிஸாரருக்கு தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவினை காவல்துறையினர் மதித்துச் செயற்படவில்லை என கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தேர்தல்கள் நிறைவடைந்ததன் பின்னர் குறித்த தபால் நிலையத்தின் திறப்புக்களை தபால் திணைக்களத்திடம் ஒப்படைப்பதாக அறிவித்துள்ளனர்.

எவ்வாறெனினும், தேர்தல் காலத்தில் தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளையே காவல் துறையினர் பின்பற்ற வேண்டுமென கீர்த்தி தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

# வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

**(உடுவில்)**

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேசத்திலுள்ள வறிய மாணவர்களுக்கு கியூடெக் கரித்தாஸ் நிறுவனக் கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளது.

இப்பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மிக வறிய மற்றும் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் காலணிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் வலி.வடக்குப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இவ் உதவிப் பொருட்கள் அண்மையில் மீள் குடியேறிய மக்களின் பிள்ளைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

# மறவன்புலவு பொது மண்டபம் பொது மக்களுக்கு இல்லை

**(உடுவில்)**

தென்மராட்சிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள மறுவன்புலவு கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள பொதுமண்டபம், பொதுமக்கள் பாவனைக்கு அனுமதிக்கப்படவில்லை.

மீள் எழுச்சித் திட்டத்தின் கீழ் பதினைந்து லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இப் பொது மண்டபக்கட்டட வேலை முடிவடைந்து பல மாதங்களாகி விட்டன. இருந்தும் திறப்புவிழா இதுவரை நடைபெறவில்லை.

# பெற்றோர் கைவிட்டுச் சென்றதால் அநாதரவான மாணவி தற்கொலை

**கிளிநொச்சி**

தந்தை, தாயாரைக் கைவிட்டு மறுமணம் செய்து கொண்டார். தாயாரும் பிள்ளைகளை அநாதரவாகக் கைவிட்டுவிட்டு முஸ்லிம் ஒருவரைத் திருமணம். தந்தையையும் தாயையும் பிரிந்த நிலையில் பேரனின் பராமரிப்பில் இருந்துவந்த மூன்று சகோதரிகளில் ஒருவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். சம்பவ தினம் மாலை சிநேகிதியின் வீட்டுக்குச் சென்று விட்டு தாமதமாக வீடு திரும்பியதால் பேரன் கண்டித்ததால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டார்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் பத்தாம் ஆண்டில் கல்வி கற்றுவந்த ஞானரத்தினம் நிரோஜினி என்ற 16 வயது மாணவியே தற்கொலை செய்து கொண்டவராவார்.

மூன்று பெண் பிள்ளைகளையும் பராமரித்து வந்த பேரன், நிரோஜினியைக் கண்டித்ததையடுத்து, மனமுடைந்த அவர் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

கிளிநொச்சி, பன்னம்கண்டி மூன்றாம் வாய்க்கால் என்றழைக்கப்படும் பகுதியில் இந்தப் பரிதாபகரமான சம்பவம் இடம்பெற்றது.

கிளிநொச்சி திடீர் மரண விசாரணை அதிகாரி டாக்டர். கே. திருலோகமூர்த்தி மரண விசாரணைகளை மேற்கொண்டார். யாழ். போதனாவைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சிவரூபன் பிரேத பரிசோதனையை நடத்தினார்.

# புலமைப் பரிசில் கருத்தரங்கு

**(சண்டிலிப்பாய்)**

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் உப அலுவலகமாகிய ஆனைக்கோட்டை கிராம சபையின் பொது நூலகத்தினால் புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களிற்கான வழிகாட்டல் கருத்தரங்கு ஒன்று இன்று திங்கட் கிழமை நடைபெறவுள்ளது.

இவ் இலவச வழிகாட்டல் கருத்தரங்கு காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணிவரையும் நடைபெறும்.

# கோட்டக் கல்விப் பணிப்பாளர்

**(உடுவில்)**

தீவகக் கல்வி வலயத்துக்கு உட்பட்ட வேலணைக் கோட்டத்திற்கு கோட்டக் கல்விப் பணிப்பாளராக எஸ்.பகீரதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே கோட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய கி.சரவணபவானந்தம் ஓய்வு பெற்றதையடுத்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.



அண்மையில் யாழ். மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாலயத்தில் இடம்பெற்ற விளையாட்டு விழாவில் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வினை இங்கு படத்தில் காண்கிறீர்கள். (படங்கள்: சண்டிலிப்பாய் நிருபர்)

# விளையாட்டரங்கு தேவை

**சண்டிலிப்பாய்**

ஆனைக்கோட்டை சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகத்திற்கு விளையாட்டு வீரர்கள் கோரிக்கை விடுக்கின்றார்கள்.

சாவற்கட்டுப் பிரதேசத்தில் இதுவரை விளையாட்டு மைதானமாகப் பயன்படுத்திவந்த பகுதிகள், தற்போது குடியிருப்பு மனைகள் அதிகரித்துவிட்டன.

எனவே அப்பகுதி இளைஞர்கள் விளையாட இடமின்றி சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஆகஸ்ட் மாதம் 06ஆம் திகதி திங்கட்கிழமை

## தேசத்தின் தலைவர்கள் தெருச் சண்டியர்களை போல நடக்கக் கூடாது

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29ஆம் திகதி இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அப்போது இலங்கையின் ஜனாதிபதியாக இருந்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. இந்தியாவின் பிரதமராக இருந்தவர் ராஜீவ் காந்தி. இந்த இரண்டு தலைவர்களும்தான் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தனர். ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் கையை இந்தியத் தரப்பு முறுக்கித்தான் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட வைத்தது என்ற விமர்சனங்கள் ஏற்கனவே எழுந்திருந்தன. இலங்கையின் முதலாது செயலாற்று அதிகாரமிகு ஜனாதிபதியாக இருந்தவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா. இரண்டாவது செயலாற்று அதிகாரமிகு ஜனாதிபதியாக விளங்கியவர் ரணசிங்க பிரேமதாசா. இரண்டு பேருமே ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

ஜே.ஆர்.விரும்பியோ, விரும்பாமலோ இலங்கைக்கு இந்தியப் படையை வரவழைத்தார். அவருக்கு அடுத்தபடியாக அதிகாரத்துக்கு வந்த ரணசிங்க பிரேமதாசா இந்தியப் படையை நாட்டை விட்டு வெளியேற்றினார். இந்தியப் படையின் வருகைக்கும் வெளியேற்றத்துக்கும் இடைப்பட்ட காலங்கள் இரண்டே முக்கால் வருடங்கள்தான். 1990 ஆம் ஆண்டு மார்ச் இறுதியில் தான் இந்தியப் படை இங்கிருந்து வெளியேறியது.

1980 களின் பிற்பகுதியில் வடக்கிலும், கிழக்கிலும் ஆயுத சக்திகளின் போராட்டம் சூடுபிடித்திருந்த நேரம். இதேவேளை தென்னிலங்கையிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் ஜே.வி.பி. கிளர்ச்சியும் சூடு பிடித்திருந்தது. ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த இரண்டு கிளர்ச்சிக் குழுக்களுமே இந்திய விரோத நிலைப்பாட்டை எடுத்திருந்தன.

இந்தியப் படை இலங்கையை விட்டு வெளியேற வேண்டுமென்றும், இல்லையேல் இந்தியாவுடன் யுத்தம் புரிவேன் என்றும் அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா மிரட்டினாராம். இவ்வாறு கூறியுள்ளார் அந்தப் போர்க்காலச் சூழ்நிலையில் இந்திய உயர் ஸ்தானிகராகக் கொழும்பில் பணியாற்றிய லால் மொஹ்ரோற்றா. புதுடில்லியில் உள்ள சமூக விஞ்ஞானத்துக்கான இந்திய நிலையத்தில் கடந்த வார இறுதியில் உரையாற்றுகையில் லால் மெஹ்றோற்றா இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். அதுமட்டுமல்ல, இந்தியப் படை இலங்கைக்கு வருகை தந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்னதாகவே அவை வெளியேற வேண்டும் என்றும், இல்லையேல் தான் தற்கொலை செய்வேன் என்றும்கூட ஜனாதிபதி பிரேமதாசா மிரட்டினாராம். 1989 ஆம் ஆண்டு ஜூலையில் ராஜீவ் காந்தியின் விசேட பிரதிநிதியாக கொழும்புக்கு வருகை தந்திருந்த பி.ஜி.தேஷ்முக் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவை சந்தித்துப் பேசியபோதே இந்த மிரட்டல்களை ஜனாதிபதி விடுத்தார் என்றும் லால் மெஹ்ரோற்றோ கூறியுள்ளார். அதாவது 1989 ஜூலை 12, 13ஆம் திகதிகளில் நடந்த சந்திப்பின்போதே இவ்வாறு மிரட்டினாராம்.

லால் மெஹ்ரோற்றோ கூறியவை உண்மையாகவும் இருக்கலாம். பொய்யாகவும் இருக்கலாம். ஆனால் 1983 ஆம் ஆண்டு ஜூலையில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனசங்காரம், கொழும்பைத் திரும்பிப் பார்ப்பதற்கு புதுடில்லியைத் தூண்டியது. ஜே.ஆர்.அரசின் அனுசரணையுடனும், ஆசிர்வாதத்துடனும்தான் அப்பாவிகளான தமிழ் மக்கள் தாக்கப்பட்டார்கள். சிங்கள மக்கள் மத்தியில் வாழும் தமிழ் மக்களைத் தாக்குவதன் மூலம், அப்போது தலையெடுத்து வந்த தமிழ்ப் பிரிவினைவாத அமைப்புக்களைத் மட்டம் தட்டலாம் என்று ஜே.ஆர்.தப்புக் கணக்குப் போட்டார். அத்துடன் அப்போதைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியை மட்டரகரமாக விமர்சனம் செய்யும் அளவுக்கு ஜே.ஆர்.தரம் தாழ்ந்து போனார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா மற்றும் ரணசிங்க பிரேமதாசா ஆகிய இரண்டு தலைவர்களுமே இந்தியாவைச் சீண்டிவிடும் பாணியில்தான் நடந்து கொண்டிருக்கிறார்கள். இலங்கையைப் பொறுத்து இந்தியா செய்ததெல்லாம் சரியென்று வாதிடுவது தவறானது. இந்தியப் படையோடு மோதுவதற்கு உள்ளூர் ஆயுத சக்திகளுக்கு உதவியும், ஒத்தாசையும், பணமும் வழங்கியதன் பின்விளைவுகளை ஜனாதிபதி பிரேமதாசாவே சந்தித்துக் கொண்டார். இந்தியா, இலங்கையில் ஆக்கிரமிக்கக் கூடும் என்ற அச்சம் இலங்கைத் தலைவர்களிடம் இருந்தது உண்மைதான். ஆனால் அரசியல் சாணக்கியம் இல்லாமல் தெருச் சண்டியர்களைப்போல நாட்டுத் தலைவர்கள் நடந்து கொள்ளக் கூடாது.

1990 ஆம் ஆண்டு கொழும்பு சட்டக் கல்லூரியில் நிகழ்த்திய உரையொன்றில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சொன்னார்: 'நான் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட மறுத்திருந்தால், உங்களில் சிலர் இங்கு உயிரோடு இருந்திருக்க மாட்டீர்கள். இந்தியா, கட்டுநாயக்காவில் குண்டுத் தாக்குதல் நடத்தி, தனது துருப்புக்களைக் கொழும்பில் இறக்கியிருக்கும். இவ்வாறான பேரழிவில் இருந்து நாட்டைக் காப்பாற்றினேன்' என்றார்.

இங்குதான் ஒரு கேள்வி எழுகிறது. ரணசிங்க பிரேமதாசாவும் நாட்டைக் காக்கத்தான் இந்தியாவோடு மோத முன்வந்தாரா?

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# உலகின் முதலாவது அணுகுண்டுத் தாக்குதல் "சின்னப் பையன்" நடத்தினான்

1945ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆறாம் திகதி. இன்று போல் அன்றும் ஒரு திங்கட் கிழமைதான். அன்றுதான் உலகத்தின் முதலாவது அணுக் குண்டு ஜப்பானிய நகரமான ஹிரோஷிமா மீது வீசப்பட்டது. அமெரிக்கப் போர் விமானம் காலை எட்டு மணிக்கு இந்த அணுக்குண்டுத் தாக்குதலை நடத்தியது. இந்த அணுகுண்டின் பெயர் "லிற்றில் போய்" (சின்னப் பையன்). சரணடைய மறுத்த ஜப்பான் மீது ஜூலை ஒன்பதாம் திகதி மற்றொரு அணுக்குண்டு வீசப்பட்டது. அந்த அணுக்குண்டின் பெயர் "தடித்த மனிதன்" ஜப்பானிய நகரமான நாகசாகி மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஹிட்லர் இறந்தபின் இனி சரண் அடைவதைத் தவிர வேறு வழி இல்லை என்று ஜெர்மனி தளபதிகள் முடிவு செய்தனர். அதன்படி 1945 மே 8ஆம் திகதி ஜெர்மனி சரணடைந்தது. நேச நாடுகளின் தளபதி மக் ஆர்தரிடம் ஜெர்மனியத் தளபதிகள் சரணாகதி பத்திரம் எழுதிக் கொடுத்தனர். அத்துடன் உலகப் போர் முடிந்திருக்க வேண்டும். ஆனால் போரை நிறுத்த ஜப்பான் மறுத்தது. பசிபிக் மகா சமுத்திரத்தில் போய்க் கொண்டிருந்த அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல் ஒன்றின் மீது ஜப்பானிய விமானங்கள் குண்டு வீசின. கப்பல் தீப்பிடித்து எரிந்து 343 பேர் பலியானார்கள்.

ஜெர்மனி சரண் அடைந்ததும், அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன், பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சில், ரஷ்ய அதிபர் ஸ்டாலின் ஆகிய மூவரும், ஜெர்மனியில் உள்ள போட்ஸ்டாம் என்ற இடத்தில் சந்தித்துப் பேசினார்கள். 1945 ஜூலை 17ஆம் திகதி இந்த சந்திப்பு நடந்தது. "உடனே சரண் அடையுங்கள். இல்லாவிட்டால் ஜப்பானை அடியோடு அழித்து விடுவோம்" என்று மூவரும் ஜப்பானை எச்சரித்துக் கூட்டறிக்கை விடுத்தனர். ஜப்பான் இதை லட்சியம் செய்யவில்லை. தொடர்ந்து போரில் ஈடுபட்டது.

யுத்தம் மேலும் தொடர்ந்தால் விபரீதமாகிவிடும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் கருதினார். ஜப்பானை ஒடுக்க அணு குண்டு வீசுவதைத்தவிர வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வந்தார். ஜப்பான் மீது அணு குண்டு வீசுமாறு, விமானப்படைக்கு கட்டளையிட்டார். 1945 ஆகஸ்டு 6ஆம் திகதி, ஜப்பானிய நேரம் காலை 8 மணிக்கு, ஜப்பானில் உள்ள ஹிரோஷிமா நகரம் மீது, "எனோலா கேய்" என்ற பெயருடைய அமெரிக்க போர் விமானம், உலகின் முதல் அணு குண்டை வீசியது. இந்த அணுகுண்டின் பெயர் "லிட்டில் பாய்" (சின்னப் பையன்).



ஐந்து டன் எடையுள்ள அணுகுண்டு வெடித்தபோது இடி முழக்கம் போல பயங்கர சத்தம் கேட்டது. வானத்துக்கும், பூமிக்குமாக நாய்க்குடை வடிவில் புகை மண்டலம் சூழ்ந்தது. இரண்டாவது அணு குண்டுவீசப்பட்டதால் ஹிரோஷிமா நகரின் 60 சதவீதப் பகுதிகள், கண் மூடிக் கண் திறப்பதற்குள் தரை மட்டமாயின. 80 ஆயிரம் மக்கள் நொடிப் பொழுதில் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகாயம் அடைந்தனர். கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை பல இலட்சக் கணக்காக உயர்ந்தது.

ஹிரோஷிமா நகரம் அழிந்த பிறகும், சரண் அடைய ஜப்பான் மறுத்தது. எனவே, மூன்று நாட்கள் கழித்து (ஆகஸ்டு 9-ஆம் திகதி அமெரிக்கா தனது இரண்டாவது அணுகுண்டை ஜப்பானின் மற்றொரு நகரமான நாகசாகி மீது வீசியது. இந்த அணுகுண்டின் பெயர் "குண்டு மனிதன்". இதனால் நகரின் பெரும் பகுதி அழிந்தது. 40 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். லட்சக் கணக்கானவர்கள் படுகாயம் அடைந்தனர். (அணுகுண்டு வெடிப்பினால் ஏற்பட்ட சாவு பற்றி, அப்போது அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்ட எண்ணிக்கையே மேலே கொடுக்கப்பட்டுள்ளது. உண்மையில் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை இலட்சக்கணக்கில் இருக்கும் என்று கருதப்படுகிறது.)

இரண்டாவது அணுகுண்டு வீசப்பட்டதைத் தொடர்ந்து, அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமன் ரேடியோவில் பேசினார். "உடனே சரண் அடையாவிட்டால், ஜப்பானை அடியோடு அழித்து விடுவோம்" என்று இறுதி எச்சரிக்கை விடுத்தார்.

### உண்மைகள் இன்னமும் உறங்குகின்றன

# மூதூரில் தன்னார்வத்தொண்டு நிறுவன ஊழியர்கள் 17 பேர் கொல்லப்பட்டு ஆறு வருடங்களாகின்றன

மூதூரில் பிரான்ஸ் தன்னார்வத் தொண்டு ஊழியர்கள் பதினேழு பேர் கொல்லப்பட்டு ஆறு வருடங்கள் கழிந்து விட்டன. பாரிசைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் பட்டினிக்கெதிரான நடவடிக்கை அமைப்பு என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில்

பே.தமிழ்பூங்குயில்மொழி

பணியாற்றியவர்களே கொல்லப்பட்டனர். 2006ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நான்காம் திகதி இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் நகரைக் கைப்பற்றுவதற்காக படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல் உக்கிரமமாக நடைபெற்ற போதே இவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் பதினாறு பேர் தமிழர்கள். ஒருவர் முஸ்லிம். இவர்கள் அனைவருமே பட்டினிக்கெதிரான நடவடிக்கை என்ற அமைப்பின்



ரீசேட்டுக்களை அணிந்த நிலையிலேயே சடலங்களாகக் காணப்பட்டனர். பதினைந்து சடலங்கள் மேற்படி தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் அலுவலக முன்றிலில் காணப்பட்டன. இரண்டு சடலங்கள் சற்றுத் தூரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனமொன்றுக்கு அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டன. பதினைந்து ஊழியர்களின் தலைகளில் பின்புறமாகச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன.

(7ஆம் பக்கம் பார்க்க)

# கடலுக்கடியில் வெள்ளிக்கட்டிகள்! வெளிவரும் இராணுவ இரகசியம்

ஆழ்கடலின் அடிமட்டத்தில் என்ன கிடைக்கும்? அரிய கடல் தாவரங்கள், மீன் வகைகள், சிப்பி, சங்கு, முத்து போன்றவைதானே. ஆனால் சமீபத்தில் கிடைத்திருப்பது வெள்ளிக்கட்டிகள். அதுவும் அரசு முத்திரையிடப்பட்ட சுத்த வெள்ளிக் கட்டிகள். கடலின் கீழே மிக ஆழத்தில் கண்டெடுக்கப்பட்டன. இதுவரை கிடைத்ததில் மிகப் பெரிய கனமான புதையலாக வர்ணிக்கப்படுகிறது இந்தக் கண்டுபிடிப்பு.

1941ல் கல்கத்தா துறைமுகத்திலிருந்து இங்கிலாந்துக்கு இந்த 240 தொன் வெள்ளிக் கட்டிகள் எஸ்.எஸ். கரிஸோப்பா என்ற கப்பலில் அனுப்பப்பட்டன. கர்நாடக மாநிலத்தின் அழகான ஜோக் ஃபால்ஸ் அருவியின் பெயர் கரிஸோப்பா. இந்தியாவில் நிறுவப்பட்ட ஒரு கம்பெனிக்குச் சொந்தமான அந்தக் கப்பலுக்கு அதன் நினைவாக இந்தப் பெயர்.

வெள்ளியைத் தவிர தேயிலை, இரும்பு போன்ற மற்ற சரக்குகளுடன் வேறு ஆறு சரக்குக் கப்பல்களுடன் ஒரே வரிசையில் சென்று கொண்டிருந்தபோது போதுமான நிலக்கரியில்லாததால் மற்றவை வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் பின்தங்கிவிட்டது. தனித்து விடப்பட்ட கப்பல் நாஜி படைகளின் போர்க்கப்பல் ஒன்றின் டார்பிடோவால் தாக்கப்பட்டு மூழ்கிப்போனது.

85 பணியாளர்களுடன் மூழ்கிய இந்தக் கப்பலில் வெள்ளிக்கட்டிகள் அனுப்பிய விஷயம் ராணுவ ரகசியமாகையால் அந்தத் தகவல் வெளியிடப்படவில்லை.

சர்வதேச கப்பல் பயணங்களின் விவரங்களைப் பதிவு செய்து வைக்கும் லாயிட்ஸ் நிறுவனம் தொண்ணூறுகளில் வெளியிட்ட தகவலினால் அயர்லாந்து கடல் பகுதியில் மூழ்கிப்போன இந்தக் கப்பலை உலகம் அறிந்தது. அதைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்ட பிரிட்டிஷ் அரசு அப்பணியை, தனியார் நிறுவனங்களுக்கு அளிக்க முன்வந்தது. மூழ்கிய கப்பலைக் கண்டுபிடித்து வெள்ளிக்கட்டிகளை எடுத்தால் எண்பது சதவிகிதம் நிறுவனத்துக்கும் மீதி அரசுக்கும் என்பது ஒப்பந்தம். கப்பலைக் கண்டுபிடிக்கும் சர்வே கட்டத்திலேயே சில கம்பெனிகள் முயற்சியைக் கைவிட்ட நிலையில், ஒடிசி என்ற அமெரிக்க நிறுவனம் கேள்விமனுவை ஏற்று ஆழ்கடல் ஆராய்ச்சிகளில் பயன்படுத்தப்படும் அதிநவீன தொழில் நுட்பத்துடன் களமிறங்கியது.

ஒடிசி எக்ஸ்ப்ளோரர் என்ற தாய் கப்பலிலிருந்து கம்ப்யூட்டர்கள் மூலம் கட்டுப்படுத்தக் கூடிய சிறிய நீர்மூழ்கிக் கப்பல்களையும் ரோபோக்களையும் பயன்படுத்தி வெற்றிகரமாக வெள்ளிக் கட்டிகளை எடுக்க ஆரம்பித்து விட்டார்கள். முதல் முயற்சியில் கிட்டத்தட்ட 48 தொன் (20 வீதம்) எடையளவில் வெள்ளிக் கட்டிகளைக் கொண்டு வந்துவிட்டார்கள். எழுபது ஆண்டுகள் ஜலவாசம் செய்திருக்கும் இந்தக் கட்டிகளில் படிந்திருக்கும் கடற்பாசியைத் தவிர வேறு பாதிப்புகள் ஏதுமில்லை. எடுத்த வரை புதையலின் இன்றைய மதிப்பு 38 மில்லியன் அமெரிக்க டாலர்கள். (ஒரு மில்லியன் 10 லட்சம்) விரைவில் இதைப் போல் இன்னும் 4 பங்கு வெளியே வரும். இதில் தங்கள் சொந்தச் செலவில் இந்த முயற்சியை மேற்கொண்ட ஒடிசி கம்பெனிக்கு 80வீதம் கிடைக்கும். மீதி பிரிட்டிஷ் அரசுக்கு. இந்தியாவிலிருந்து போனதுதானே, நமக்கு? அதெல்லாம் ஒன்றும் கிடையாதாம். அரசாங்க சொத்தான அது அன்றைய அரசுக்குத்தானாம். ரோபோக்களை ஈடுபடுத்தியிருக்கும் இந்த முயற்சி ஆழ்கடல் ஆராய்ச்சியில் ஒரு முக்கிய திருப்புமுனை. மூழ்கிப்போன கப்பல்களை மீட்க மட்டுமில்லை, பல ஆராய்ச்சிகளுக்கும் உதவும்" என்கிறார்கள்.

வல்லுனர்கள். ஒடிசியின் அடுத்த முயற்சி 1995ல் கண்டுபிடிக்கப்பட்ட கடலடியில் கிடக்கும் ஒரு நீர்மூழ்கிக் கப்பல். இந்தக் கப்பலில் இரண்டு தொன் தங்கம் இருக்கிறது!

# இன்றைய சிந்தனை

"ஒரு அழகிய மனோரதத்தை,
ஒரு உன்னத இலட்சியத்தை,
தங்கள் இதயத்தில் வைத்துப்
போற்றுபவர்கள் ஒருநாள்
அதனை அடைந்தே தீருவர்"

*- ஜோன் அலன்*

மனிதகுலம் தன் கனவாளர்களை மறந்துவிட முடியாது, அது அவர்களின் இலட்சியங்கள் மங்கி மறைந்து போக விட்டுவிட முடியாது. அது அவைகளில் தான் வாழ்கிறது. தான் ஒருநாள் கண்டறிந்து கொள்ளப் போகும் நனவுகளாக அது அவற்றை அறியும்.

இசைஞர், சிற்பி, ஓவியர், கவிஞர், தேவதூதர், ஞானி, இவர்கள்தான் விண்ணுலகை உருவாக்குபவர்கள். சொர்க்கலோகத்தின் கட்டுமானக் கலைஞர்கள். அவர்கள் வாழ்ந்திருப்பதால்தான் உலகம் அழகாக இருக்கிறது. அவர்கள் இல்லாவிட்டால், கடும் பிரயத்தனப்பட்டுக் கொண்டிருக்கும் மனிதகுலம் அழிந்துபோகும்.

ஒரு அழகிய மனோரதத்தை, ஒரு உன்னத இலட்சியத்தை, தங்கள் இதயத்தில் வைத்துப் போற்றுபவர்கள் ஒருநாள் அதனை அடைவார்கள். கொலம்பஸ் பிறிதோர் உலகம் பற்றிய ஒரு மனோரதத்தைச் சிந்தையில் வைத்துப் போற்றினார். அதனைக் கண்டு பிடித்தார்.

கோபர்நிகஸ் உலகங்களின் பல்லெண்ணிக்கை மற்றும் மேலும் விரிந்த பிரபஞ்சம் என்னும் மனோரதத்தை மனதில் பேணினார். அதனை வெளிப்படுத்தினார். புத்தபிரான் மாசற்ற அழகும் பூரண அமைதியும் கொண்ட ஒரு ஆன்மீக உலகைச் சிந்தையில் நோக்கினார். அதனுள் பிரவேசித்தார்.

உங்கள் மனோரதங்களைச் சிந்தையில் வைத்துப் போற்றுங்கள், உங்கள் இதயத்தில் கிளரும் சங்கீதத்தை, உங்கள் மனதில் உருவாகும் அழகை, உங்களின் மிகச் சிறந்த எண்ணங்களை அலங்கரிக்கும் வசீகரத்தை, சிந்தையில் கொண்டு போற்றுங்கள். ஏனெனில் அவற்றிலிருந்துதான் எல்லா மகிழ்ச்சிகரமான சூழ்நிலைகளும், எல்லா சொர்க்கச் சுற்றுப்புறமும் தோன்றுகின்றன.

இவைகளால், இவைகளுக்கு நீங்கள் உண்மையாக இருந்தால், உங்கள் உலகம் இறுதியில் நிர்மாணிக்கப்படும்.

உன்னதமான கனவுகளைக் கனாக் காணுங்கள். நீங்கள் எப்படிக் கனவு காண்கிறீர்களோ அப்படியே ஆகிறீர்கள். உங்கள் மனோரதம் என்பது நீங்கள் ஒரு நாள் என்னவாக இருப்பீர்கள் என்ற வாக்குறுதி ஆகும்.

உங்கள் இலட்சியம் என்பது நீங்கள் என்ன வெளிப்படுத்துவீர்கள் என்ற ஆருடம் ஆகும்.

மாபெரும் சாதனையானது ஆரம்பத்திலும் மற்றும் சில காலமும் ஒரு கனவுதான். உங்கள் புறச்சூழல்கள் இணக்கமின்றி இருக்கலாம். ஆனால் நீங்கள் ஒரு இலட்சியத்தைக் கண்டுணர்ந்து கொண்டு அதனை அடைய உண்மையாய் உழைக்க மட்டும் செய்தீர்களெனில் அவை வெகுகாலம் அங்ஙனம் நீடித்திருக்க மாட்டா.

# மூதூரில் தன்னார்வத் தொண்டு நிறுவன......

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரு சடலங்களின் முதுகுப் புறத்தில் காயங்கள் காணப்பட்டன. தம்மைத் தாக்கிய நபர்களிடமிருந்து தப்பியோட முனைந்த போது இவர்கள் சுடப்பட்டிருக்கலாமென நம்பப்படுகின்றது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மீள் கட்டுமானப் பணிகளுக்கு உதவுவதற்காக இவர்கள் நியமிக்கப்பட்டவர்களாவர். யுத்தத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு நீர் மற்றும் சுகாதார வசதிகளையும் இவர்கள் செய்து கொடுத்து வந்தனர். இந்த கொலைகளை ஒரு யுத்தக் குற்றமென நியுயோர்க்கைத் தலைமையகமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்திருந்தது. இச் சம்பவங்கள் குறித்து 2011 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்தக் குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இக் குற்றச்சாட்டுக்கள் ஆதாரம் அற்றவை என்று இலங்கை அரசாங்கம் மறுத்திருந்தது. இலங்கையில் சிவில் யுத்தம் மீளவும் உக்கிரம் அடைந்திருந்த வேளையிலே இப்படுகொலைகள் இடம்பெற்றிருந்தன. அப்போது இலங்கையில் கண்காணிப்புப் பணியில், யுத்தக் கண்காணிப்புக் குழு ஒன்று ஈடுபட்டிருந்தது. இந்தப் பணியாளர்கள் முழங்கால்களில் இருக்க வைக்கப்பட்டுச் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாமென இலங்கை கண்காணிப்புக் குழு தெரிவித்திருந்தது.

இந்தப் படுகொலைகள் குறித்தும் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ 2006ஆம் ஆண்டு நவம்பரில் உத்தரவிட்டிருந்தார். ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் சிரேஷ்ட இராஜ தந்திரிகள் மற்றும் பிரமுகர்கள் பதினொரு பேர் அங்கம் வகித்தனர். ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் நிஸங்க உடலகம இந்த ஜனாதிபதி விசாரணைக் குழுவுக்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

2006 நவம்பர் மாதம் நியமிக்கப்பட்ட இந்த ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு மேலும் பதினாறு மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாகவும் விசாரணை நடத்தும் படி பணிக்கப்பட்டிருந்தது. மூதூர்படுகொலை சம்பந்தமாக விசாரணைகளை சுமார் 18 தடவைகள் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நடத்தியிருந்தது. மூதூர் படுகொலைகள் தொடர்பான தனது விசாரணை அறிக்கையை ஜனாதிபதி ஆணைக்குழு வெளியிட்டிருந்தது.' மூதூர் படுகொலைகள் தொடர்பான தனது விசாரணை அறிக்கையை ஜனாதிபதி ஆணைக்குழு வெளியிட்டிருந்தது. மூதூர் தன்னார்வத் தொண்டு ஊழியர்களின் படுகொலையில் இலங்கை இராணுவமோ கடற்படையோ சம்பந்தப்பட்டிருக்கவில்லை என்று விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. படுகொலைகள் நடைபெற்ற இடத்தில் இருந்தவர்களென்று கூறப்பட்ட சாட்சியங்களை அடிப்படையாக வைத்து இந்த முடிவுக்கு விசாணைக்குழு வந்தது என்றும் சொல்லப்பட்டது. இப்படுகொலைகளை ஒன்றில் புலிகள் இயக்கம் அல்லது ஊர்காவல்படையென அழைக்கப்படும் துணைப்படையே செய்திருக்கலாம் என்று அந்த விசாரணைக் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. விசாரணைக் குழு அறிக்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

மனித உரிமைகளுக்கான யாழ்.பல்கலைக்கழக போதனாசிரியர்கள் என்ற அமைப்பு இந்த படுகொலைகள் தொடர்பான அறிக்கையை 2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிட்டிருந்தது. இந்த கொடுஞ்செயலை அரசாங்கப் பாதுகாப்புப் படையினரே செய்தனர் என்று நம்பப்படுவதாக இந்த அமைப்புக் குற்றம்சாட்டியிருந்தது. இதனையும் அரசாங்கம் நிராகரித்திருந்தது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு தனது அவதானிப்புக்களை ஓர் அறிக்கையாக 2007ஆம் ஆண்டு ஏப்பிரலில் வெளியிட்டிருந்தது. இலங்கை குற்றத் தடுப்பு பிரிவினரும் பொலிஸாரும் நடத்தி விசாரணைகளில் பல தவறுகள் இடம்பெற்றிருப்பதாக சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவைச் சேர்ந்த மைக்கல் பேன்பம் கியூ.சி.தெரிவித்தார். இந்தக் குற்றச் செயல்களைப் புரிந்தவர்களை இனங்கண்டு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு தெரிவித்திருப்பதாக இது பற்றி விசாரணை நடத்துவதற்கு பொலிஸாரே படையினரோ அங்கம் வகிக்காத சுயாதீன ஆணைக்குழுவினை நியமிக்குமாறு அது கேட்டிருந்தது.

விசாரணைகள் நிறைவடைவதற்கு முன்னதாகவே இந்தப் படுகொலைகளைப் புலிகளே புரிந்திருந்தனரென்று பொலிஸ் அறிக்கைகள் சுட்டிக்காட்டியிருந்தன.

மூதூர் படுகொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாகச் சர்வதேச விசாரணைக் கமிசன் ஒன்றினை நியமிக்குமாறு ஐநா செயலாளர் நாயகத்தையும் ஏனைய ஐ.நா.அமைப்புகளையும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் கேட்டிருந்தது. இலங்கை ஆயுத மோதலில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரினதும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் மீது எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் அது சிபார்சு செய்திருந்தது.

மூதூர் தன்னார்வத் தொண்டு ஊழியர்களின் படுகொலை குறித்து பூரண விசாரணை நடத்தப்படும் என்று கடந்த மார்ச் மாதம் நடைபெற்ற ஜெனிவா மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தில் இலங்கை உறுதி அளித்திருந்தது. முன்னாள் சட்டமா அதிபர் மோகன் பீரிஸ் இந்த உறுதிமொழியை வழங்கியிருந்தார்.

# தேசிய மொழிகள் மற்றும் சமூக...

(தொடர்ச்சி)

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு விபரம் :
(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :..............................
(ii) பற்றுச்சீட்டு இலக்கம், திகதி :..............................
(iii) செலுத்திய பணம் ரூபா :..............................

பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழரா வண்ணம் இங்கே ஒட்டவும். (பற்றுச்சீட்டின் நிழல் பிரதியொன்றை விண்ணப்பதாரி தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.)

9. விண்ணப்பதாரியின் உறுதிமொழி :
(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் நான் அறிந்த வகையில் உண்மையெனவும் பிழையற்றதெனவும் வெளிப்படுத்துகிறேன். இங்கே யாதாயினும் பகுதிகளைப் பூர்த்தி செய்யாததனால் மற்றும்/ அல்லது பிழையாகப் பூர்த்திசெய்வதினால் ஏற்படக்கூடிய பாதிப்பை ஏற்றுக் கொள்வதற்கு இணங்குகிறேன். அத்துடன் இங்கே சகல பகுதிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதையும் வெளிப்படுத்துகிறேன்.
(ஆ) எனது இந்த வெளிப்படுத்துகை உண்மைக்குப் புறம்பானது என நிரூபிக்கப்படும் பட்சத்தில் நியமனம் செய்யப்படுவதற்கு தகுதியற்றவராக்கப்படுவேன் என்பதையும் நியமனம் செய்யப்பட்டபின் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.
(இ) மேலும் பரீட்சை நடாத்தப்படுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இயற்றப்படும் சட்டதிட்டங் களுக்கும் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பான தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் என்பதையும் வெளிப்படுத்துகிறேன்.
(ஈ) இங்கே குறிப்பிட்டுள்ள எந்த விபரத்தையும் பின்பு மாற்றமாட்டேன்.

...........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
திகதி :..............................................


10. (அ) விணணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும்
திரு./ திருமதி/ செல்வி .............................................................. அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்பதையும், அதற்கான பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் ஒட்டியுள்ளார் என்பதையும் அவர் எனது முன்னிலையில் .................... ஆந் திகதி தனது கையொப்பத்தை இட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்.

..................................................
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.
உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் :..............................................
பதவி :..............................................
விலாசம் :..............................................
திகதி :..............................................
(அதிகாரபூர்வ முத்திரையிட்டு உறுதிப்படுத்தவும்).

# இலங்கையின் கைத்தொழிலும் சுற்றாடல் நலன் விருத்தியும்

நிலைபெறத்தக்க அபிவிருத்தியின் முழுமொத்த வேலைச் சட்டகத்தினுள் சர்வதேச சமவாயங்கள், ஒழுங்கு விதிகளை கடைப்பிடிப்பதற்கு கைத்தொழிலுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும் கைத்தொழில் அமைச்சு முயற்சித்து வருகிறது. தற்போதைய உலகளாவிய சுற்றாடற் சூழ்நிலைகளில், உலகளாவிய ரீதியில் சந்தைப்படுத்தத்தக்க, சுற்றாடலுக்கு இணக்கமான கைத்தொழில் உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்வது, WTO உடன்படிக்கைகளின் கீழ் தரப்பெறும் சைகைகள் அடங்கலாக சர்வதேசச் சமவாயங்கள் வழியில் எழும் கடப்பாடுகள் காரணமாக, அத்தியாவசியமானதாக ஆகியுள்ளது. அதிக அபிவிருத்தி கண்டுள்ள நாடுகள் அவற்றின் சந்தைகளுள் நுழைவதற்கான முற்தேவையாக சுற்றாடல் நியமங்களை ஏனைய பொருளாதார, பொருளாதாரம் சாராத நிலைமைகளுடன் இணைத்துள்ளன. ஆதலின் இந்த நியமங்களுக்கு உதவுவது மிக முக்கியமானது ஆகியுள்ளது.

இவை, சுற்றாடலைப் பாதுகாக்கும் நோக்கத்துக்கு மட்டுமல்லாமல், கைத்தொழிலின் நிலைப்பு, வளர்ச்சி ஆகிவற்றுக்கும் மிக முக்கியமானது ஆகியுள்ளது. ஐரோப்பிய சமூக நாடுகள் அத்தகைய நியமங்களைக் கடைப்பிடிப்பது குறித்து கண்டிப்பாக உள்ளன. அத்தகைய நியமங்களில் போத்தலில் அடைத்த நீர், குழந்தை உணவு போன்ற உற்பத்திப் பொருள் நியமங்களும் ஆடைக் கைத்தொழில், புடைவைக் கைத்தொழில்களுக்கான ISO 17025, HACCP (இடர் பகுப்பாய்வு ஆபத்துக் கட்டுப்பாட்டு நிலை), ECO - Tex 1000 போன்ற ISO நியமங்கள், ECO - கட்டுத் துண்டுகள் போன்றவையும் சுற்றாடல் பற்றி அறிவிக்கும் உத்தேச உலகளாவிய முன்முனைவும் அடங்குகின்றன. இந்த நியமங்களிற் சில தற்போது செயற்படுத்தப்படவில்லை. எனினும், அவை அடுத்த தசாப்தத்தினுள் நிச்சயமாகச் செயற்படுத்தப்படும்.




ஆதலின் இலங்கைத் கைத்தொழில் உலக சந்தைகளில் போட்டி நிலையில் இருக்க வேண்டுமெனில் அவை எதிர்காலத்தில் இக்குறித்த தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்கு தயார் நிலைப்படுத்தப்படுதல் வேண்டும்.

இது, சுற்றாடல் அக்கறைகளுக்கு இடமளிக்கும் வகையில், கைத்தொழில்களினுள் தொழில்நுட்ப புத்தாக்கங்கள், இசைவாக்கங்களை தேவைப்படுத்தியுள்ளது. கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு, இந்தத் தேவைப்பாடுகளுக்கு இயைபுற்றதாக கைத்தொழிலர்களை, நிலைபெறத்தக்க கைத்தொழில் அபிவிருத்தி பொருட்டு இழிவுப் பொருள்களை இயன்ற அளவு குறைத்தல், தொழிநுட்பத்தின் தரத்தை உயர்த்துதல் போன்ற கோட்பாடுகளை உளத்திற் பதிய வைக்கும் அதே வேளையில் துப்புரவான உற்பத்திப் பிரயோகம் போன்ற திறமுறைகளைக் கைக்கொள்ளுவதற்கு ஊக்குவித்துள்ளது.

சுற்றாடல் துறையில் அமைச்சின் பங்களிப்பை 03 பிரதான வகுதிகளின் கீழ் பரிசீலிக்க முடியும். அவை வருமாறு,

## கொள்கை வகுத்தலில் அதன் பங்களிப்பு

இந்த இலக்குகளை எய்தப் பெறுவதற்கு குறித்த நிகழ்ச்சித்திட்டத்தை தாபிப்பது நோக்கில் அதன் பங்களிப்பு.

அமைச்சின் சொந்த வேலைத் திட்டங்களில் அத்தகைய நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்.

கொள்கை வகுப்பு தொடர்பில கைத்தொழில் அமைச்சு சுற்றாடல் விடயங்கள் குறித்து உயிர்ப்புள்ள பங்களிப்பைத் தொடர்ந்து செய்து வருகிறது. கடந்த காலங்களிலும் அமைச்சு இந்தத் துறையில் சுறுசுறுப்பாகவே தொழிற்பட்டு வந்துள்ளது. இதற்கான நல்ல உபகரணங்களாக தேசிய கைத்தொழில் மாசு முகாமை கொள்கைக் கூற்று (1996), தேசிய சுற்றாடல் செயற் திட்டம் (கைத்தொழில் 1997 - 2001), கைத்தொழில் அபிவிருத்தியில் துப்புரவான உற்பத்தியை ஒன்றிணைத்தல் ஆகியன விளங்குகின்றன. இக் கொள்கைக் கூற்றுக்களை வகுத்தமைப்பதில் அமைச்சு உயிர்ப்புள்ள பங்களிப்பைச் செய்துள்ளது. 2002ஆம் ஆண்டில் கைத்தொழில் அமைச்சு, கைத்தொழிற்துறை தொடர்பில் சுத்த உற்பத்திக் கொள்கையை வகுத்தமைத்துள்ளது.

## தேசிய சுத்த உற்பத்தி நிலையம்

தேசிய சுத்த உற்பத்தி நிலையம் 2002 ஆம் ஆண்டில் கைத்தொழில் அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டது. உலகில் 24ஆவது சுத்த உற்பத்தி நிலையமாக விளங்கும் இந்த நிலையத்தின் நோக்கம் அடிப்படையில் முற்போந்தமாக பந்தியிற் குறிப்பிடப்பெற்ற எய்துவதற்கு கைத்தொழிலர்களுக்கு உதவுவதாகும். இந்த வேலைத்திட்டத்தின் செயற்படுத்தல் முறைமையாக கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு விளங்கும் அதே வேளையில் அதன் நிறைவேற்று முகாமையாக இலங்கை வர்த்தக, கைத்தொழிலர் குழுமங்களின் சம்மேளனம் (FCCISL) விளங்குகிறது.

வேலைத்திட்டத்துக்கு ஆகும் மொத்தச் செலவு 17.3 மில்லியன் குரோணர்கள். இதில் NORAD இனது பங்களிப்பு 13 மில்லியன் குரோணர்கள் ஆகும். இதில் UNIDO இடமிருந்து தொழின்நுட்ப உதவியாகப் பெற்ற நன்கொடைக் கூறும் உள்ளது. இதன் பெறுமதி ஏறுத்தாழ 4.5 மில்லியன் குறோனர்கள்.

வாழ்க்கை வட்ட மதிப்பீடு, சிக்கன திட்டமிடல், உலகளாவிய அறிவித்தல் முன்முயற்சிகள், சுற்றாடல் முகாமைச் சேவைகள், கூட்டுறவுச் சமூகப் பொறுப்புக்கள் போன்ற நவீன சுற்றாடல் முகாமைச் சாதனங்களை அறிமுகஞ் செய்வதனூடாக சுத்த உற்பத்தியை ஒரு அடிமட்டச் சாதனமாகக் கொண்டு தேசிய சுத்த உற்பத்தி நிலையம் நிலைபெறத்தக்க உற்பத்தி, நுகர்வுக் கருத்தை மேம்படுத்தி வருகிறது. தேசிய சுத்த உற்பத்தி நிலையத்தின் முயற்சிகள்

**தேசிய சுத்த உற்பத்தி நிலையத்தின் முயற்சிகள் யாவும் இலங்கையின் சட்டங்கள் ஒழுங்கு விதிகளுக்கு இணங்கவும் இலங்கையில் ஒரு தரப்பினராக விளங்கும் சர்வதேசச் சமவாயங்கள், உடன்படிக்கை மூலங்களுக்கு அமையவும் திட்டமிடப்பட்டுள்ளன.**

யாவும் இலங்கையின் சட்டங்கள் ஒழுங்கு விதிகளுக்கு இணங்கவும் இலங்கை ஒரு தரப்பினராக விளங்கும் சருவதேயச் சமவாயங்கள், உடன்படிக்கை மூலங்களுக்கு அமையவும் திட்டமிடப்பட்டுள்ளன. இதில் ஜொனெஸ்பேக் உச்சி மாநாட்டுப் பிரகடனங்களும் மில்லெனியம் அபிவிருத்தி இலக்குகளும் அடங்கும்.

## 2005இன் இறுதி வரையில் தேசிய சுத்த உற்பத்தி நிலையத்தின் முயற்சிகள்

### நோக்கங்களும் குறிக்கோள்களும்

அக்கறைதாரர்கள் அனைவரிடையேயும் (கைத்தொழில்கள், வங்கிகள், சேவை வழங்குநர்கள், அரசாங்கத் தொழின் முயற்சிகள், பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், தொழிற் சமாசங்கள் போன்றவை) விழிப்புணர்வைக் [illegible]டி எழுப்புதல்.

உசாவலர்கள்/ கணக்காய்வாளர்கள்/ வசதியேற்பாட்டாளர்களை பயிற்றுவிப்பதற்கான CP பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் அவற்றுடன் தொடர்புற்ற சுற்றாடல்



முகாமைச் சாதனங்கள், தொழில்நுட்பங்களும்.
செயன்முறைக் காட்டல்
வேலைத்திட்டங்கள் அடங்கலாக CP செயல்வழக்குகளை செயற்படுத்துவதற்குரிய கைத்தொழில்களுக்கான அறிவுரை பகருகை, மதியுரைச் சேவைகள்.
பல்கலைக்கழகக் கல்வியாளர்களை பயிற்றுவதுடன் CP இனை பல்கலைக்கழகப் பாடவிதானத்தில் அறிமுகஞ் செய்தல்.
கைத்தொழிலர்களுக்கும் ஏனைய அக்கறையுள்ள தரப்பினர்களுக்குமான தகவல் பரப்புகை.

முதலீடும் நிதியளிப்பும்
கொள்கை அபிவிருத்தி



## 2005 செம்பர் வரையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்


2002 முதல் 67 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. அவற்றில் 2596 பேர் பங்குபற்றியுள்ளனர்.
பங்குபற்றியோர் விபரங்கள்
கைத்தொழிலதிபர்கள் /முகாமையாளர்கள்
வங்கி ஆளணியினர்
பல்கலைக்கழக கல்வியாளர்கள்
உள்ளூர் அதிகாரபீட உத்தியோகத்தர்கள்
அரசாங்கத்துறை உத்தியோகத்தர்கள்
பாடசாலை ஆசிரியர்கள் சிறுவர்கள்
கைத்தொழில் வலயப் பணியாளர்கள்

## பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

1065 பேர் 3698 பயிற்சி நாட்களிற் பயிற்றுவிக்கப்பட்டனர்.
பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் மேவப்பட்ட வகைகள் துறைகள்
CP உசாவலர்கள் கணக்காய்வாளர்கள் தங்கிப் ப[illegible]ற்றுவோர் பயிற்சி
சக்தி உசாவலர்கள் முகாமையாளர் பயிற்சி
பல்கலைக்கழகப் பாடவிதான அபிவிருத்தி
வாழ்க்கை வட்ட மதிப்பீடு (LCA )
உற்பத்திப் பொருள்களின் சிக்கன வடிவமைப்பு
சுற்றாடல் முகாமைக் கணக்கீடு
உலோக முடித்தற் கைத்தொழிற் பயிற்சி
உலகளாவிய அறிவித்தல் முன்முயற்சிப் பயிற்சி
comfar iii வேலைத்திட்ட முகாமை
சுற்றாடல் முகாமை
சுற்றாடல் முகாமை நடத்துநர்
இடரார்ந்த கழிவுப் பொருள்
முகாமைகழிவுப் பொருள் மீளப் பயன்படுத்துதல் நிகழ்ச்சித் திட்டம் (கடதாசி பிளாஸ்ரிக்)

## செயல்முறைகாட்டு வேலைத்திட்டங்கள்

இறப்பர் துறை
- மரப்பால், கிறேப்பு, தாழ்த்து உற்பத்திப் பொருள்கள், நுரை இறப்பர்பால் பொருள்கள், திண்ம இறப்பர் என்பவற்றுக்கான 5 தொழிற்சாலைகள்.
தேங்காய்த் துறை - வயம்பவில் 4 உலர்த்திய தேங்காய் தொழிற்சாலைகள்.
புடைவை, ஆடை - 5 புடைவை, ஆடைக் கைத்தொழில்கள்.
விடுதித் துறை - நட்சத்திர வகுப்பீட்டுடன் 05 சுற்றுலா விடுதிகள்.
தேயிலைத் துறை - கம்பகாவில் 3 தொழில்சாலைகளும் இரத்தின புரியில் 2 தொழிற்சாலைகளும்.



CP உசாவலர்கள் கணக்காய்வாளர்கள் NCPC 47 தொழிற்சாலைகளில் அகல்விரிவான மதிப்பீடுகளை நடத்தியுள்ளது.
- 1716 கழிவுப் பொருள் குறைத்தல் விருப்புத் தெரிவுகள் இனங் காணப்பட்டன.
- 55வீதம் குறைந்த செலவு விருப்புத் தெரிவுகள் செயற்படுத்தப்பட்டன.
- 27வீதம் நடுத்தரச் செலவு விருப்புத் தெரிவுகள் ஒருசில மட்டும் செயற்படுத்தப்பட்டன.
- எஞ்சிய 18வீதம் பாரிய முதலீடுகள் - குறைந்த செலவு நிதியளிப்பு இல்லாமை காரணமாக கைத்தொழில்களால் செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை.
இது 55 விரைந்த CP மதிப்பீடுகளையும் நடாத்தியுள்ளது.



## உற்பத்தித் திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்

கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சில் தர முகாமை முறைமை ஒன்றை விருத்தி செய்வதற்காக அமைச்சு ISO 9001 - 2000 சான்றிதழைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அது, கைத்தொழில் துறையில் முதலீடு செய்வதற்கு அல்லது தற்போதுள்ள தமது கைத்தொழிலில் காணப்படும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு அமைச்சுக்கு விஜயம் செய்யும் முதலீட்டாளர்களுக்கு மகிழ்வளிக்கும் சூழ்நிலையை உருவாக்குதவதற்கு மிக முக்கியமானது.


கைத்தொழில் துறையில் உற்பத்தித் திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தைச் செயற்படுத்துதல்.

உற்பத்தித் திறன் மேம்படுத்தல் நிகழ்ச்சித் திட்டமானது, உற்பத்தி செய்யும் கைத்தொழிலதிபரை உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலம் உலக சந்தையில் போட்டித்தன்மையை எதிர்கொண்டு நிலைபெறச் செய்வதற்கு தயார்படுத்துவது மிக முக்கியமானது. அது, சராசரி உற்பத்திச் செலவைக் குறைப்பதன் மூலம் இலாப அளவை உச்சப்படுத்துவதற்கு கைத்தொழில்களுக்கு உதவுகிறது. இந்த நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளூர்க் கைத்தொழில்கள் சருவதேய வாங்குநர்களிடையே அங்கீகாரம் பெறுவதற்கும் உதவுகின்றன.

இந்த உண்மை நிலைகளைப் பரிசீலனை செய்து கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு ஒரு முன்னோடி நிகழ்ச்சித் திட்டமாக பத்துத் தொழிற்சாலைகளில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை ஆரம்பித்தள்ளது. பின்னர் அது விரிவுபடுத்தப்படும். இந்தப் பத்துத் தொழிற்சாலைகளில். மூன்று தொழிற்சாலைகள், நிகழ்ச்சித் திட்டத்தின் இறுதியில் தர விருதினை, வென்றெடுப்பதற்கு இலக்குக் குறிக்கப்பட்டன. மேலும் உள்ளூர்க் கைத்தொழில்கள் தர முகாமை முறைமையைக் கைக்கொள்வதற்கு அவற்றை ஊக்குவிப்பதற்கு இத்தொழிற்சாலைகள் ஏனைய தொழிற்சாலைகளுக்கு மாதிரிச் செயன்முறைகாட்டு தொழிற்சாலைகளாகவும் விளங்கவுள்ளன.

இது தொடர்பில் இந்த அமைச்சு வெகு சீக்கிரத்தில் பெரிய, நடுத்தர, சிறிய அளவிலான கைத்தொழில்களிலிருந்து விண்ணப்பங்களைக் கோரவுள்ளது. முப்பது கம்பனிகள் ஒரு தொடர் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்படும். இறுதியில் பத்துக் கம்பனிகள் சான்றிதழ்கள் வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்படும். தெரிவுத் தகுதிறனின் மீது செய்யப்படும். இக்கம்பனிகளின் முகாமையும் பணியாளர்களும் மிகுந்த ஆர்வம் காட்டியுள்ளனர் ●

# 5 மணி நேர வெற்றி! கிளப்புகிறது சர்ச்சையை!



ஆண்களுக்கான 69 கிலோ எடைப்பிரிவு குத்துச்சண்டை "வெல்டெர்" பிரிவில் இந்தியாவின் விகாஷ் கிருஷ்ணன், அமெரிக்காவின் எரோல் ஸ்பென்சை எதிர்த்து ஆடினார். பரபரப்பான இந்த ஆட்டத்தில் விகாஷ் கிருஷ்ணன் 13,11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார், என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் அமெரிக்கா தரப்பில் மேன்முறையீடு செய்யப்பட்டது. இதனால் போட்டி முடிந்து சுமார் 5 மணி நேரம் கழித்து இந்திய வீரர் விகாஷ் கிருஷ்ணனின் வெற்றி திரும்ப பெறப்பட்டது. இது ஒலிம்பிக்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த முடிவால் இந்தியா கடும் அதிருப்தி அடைந்தது. இதையடுத்து சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனம் நீண்ட அறிக்கை கொடுத்து சமாளித்துள்ளது.

அதன் விவரம் வருமாறு: விகாசுக்கு நடுவர்கள் கொடுத்த தீர்ப்பு தவறானது என அமெரிக்காவால் மேன்முறையீடு செய்யப்பட்டது. 3 சுற்றுக்கள் முடிவில் விகா' 9 முறை தவறாக ஆடியுள்ளார். ஆனால் நடுவர்கள் விகாசுக்கு ஒரு முறை மட்டும்தான் எச்சரிக்கை கொடுத்துள்ளனர். 2வது சுற்றில் விகாஷ் தனது வாயில் பொருத்தியிருந்த பாதுகாப்பு கருவியை எரோல் ஸ்பென்ஸ் மீது வீசியதாகவும் நடுவர் இதை சரியாக கவனிக்கவில்லை என்றும் புகார் கூறப்பட்டது. இதன் அடிப்படையில் போட்டி முடிவுகள் ஆராயப்பட்டது.

இதில் விகாஷ் தவறு செய்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அவரை எதிர்த்து ஆடிய வீரருக்கு கூடுதலாக 4 புள்ளிகள் வழங்கப்பட்டது.

முடிவில் அமெ ரிக்க வீரர் எரோல் ஸ்பென்ஸ் 15,13 என்ற புள்ளி கணக்கில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப் பட்டது. இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது. இந்த முடிவால் விகாஷ் கிருஷ்ணன் அதிர்ச்சிய டைந்தார்.

**இந்தியா ஆட்சேபம்**

விகாஸ் கிருஷ்ணன் வெற்றி செல்லாது என்ற சர்வதேச குத்துச்சண்டை சங்கத்தின் முடிவை எதிர்த்து மேல் முறையீடு செய்ய இருப்பதாக இந்திய அணியின் தலைமை நிர்வாகி பி.கே.எம். ராஜா கூறியுள்ளார். இது குறித்து அவர் கூறுகையில், "அமெரிக்க வீரரும் பல தவறுகளை செய்தார். அதற்காக அவரும் எச்சரிக்கப்பட்டிருக்க வேண்டும். எனவே மேல் முறையீடு செய்ய உள்ளோம். வழக்கமாக எந்த குத்துச்சண்டை வீரரும் நடுவர் முடிவை எதிர்த்து மேல் முறையீடு செய்வதில்லை.

ஆனால், விகாஸ் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட பிறகு, அது செல்லாது என்று கூறியுள்ள தால் நாங்களும் முறையீடு செய்ய உள்ளோம்" என்றார்.


ஏற்கனவே இந்திய குத்துச்சண்டை வீரர் சுமித் சங்வான் மற்றும் மகளிர் வட்மின்ரன் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஜுவாலா கட்டா , அஷ்வினி பொன்னப்பா ஜோடி செய்த முறையீடுகளை ஒலிம்பிக் நிர்வாகக் குழு நிராகரிக்கப்பட்டுள்ளன. இதனால் ஒலிம்பிக குழு பக்கச்சார்பாக நடப்பதாக இந்தியர்களும் அந்நாட்டுப் பத்திரிகைகளும் கொந்தளிக்கின்றனர்.

# பதக்கப் பட்டியல்

லண்டனில் இடம்பெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகளில் சீனாவின் முதலிடத்தை 7ஆம் நாளில் அமெரிக்கா கைப்பற்றியது. போட்டியை நடத்திவரும் இங்கிலாந்தும் தற்போது முன்னிலை பெற்று வருகிறது. நேற்று முன்தினம் வரை பதக்கப் பட்டியலில் முன்னிலை வகிக்கும் முதல் 20 நாடுகள் வருமாறு:-

| நிலை | நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | ஐ.அமெரிக்கா | 26 | 13 | 15 | 54 |
| 2 | சீனா | 25 | 16 | 12 | 53 |
| 3 | பிரித்தானியா | 14 | 7 | 8 | 29 |
| 4 | தென் கொரியா | 9 | 3 | 5 | 17 |
| 5 | பிரான்ஸ் | 8 | 6 | 8 | 22 |
| 6 | ஜேர்மனி | 5 | 10 | 6 | 21 |
| 7 | இத்தாலி | 5 | 5 | 3 | 13 |
| 8 | கஸகஸ்தான் | 5 | 0 | 0 | 5 |
| 9 | வடகொரியா | 4 | 0 | 1 | 5 |
| 10 | ரஷ்யா | 3 | 15 | 10 | 28 |
| 11 | நெதர்லாந்து | 3 | 1 | 4 | 8 |
| 12 | தென்னாபிரிக்கா | 3 | 1 | 0 | 4 |
| 13 | நியுசிலாந்து | 3 | 0 | 4 | 7 |
| 14 | ஜப்பான் | 2 | 10 | 12 | 24 |
| 15 | கியூபா | 2 | 2 | 1 | 5 |
| 16 | ஹங்கேரி | 2 | 1 | 2 | 5 |
| 17 | போலந்து | 2 | 1 | 1 | 4 |
| 18 | உக்ரைன் | 2 | 0 | 4 | 6 |
| 19 | அவுஸ்திரேலியா | 1 | 12 | 7 | 20 |
| 20 | ரோமானியா | 1 | 4 | 2 | 7 |

# தங்க வேட்டையில் பெல்ப்ஸ்



நீச்சல் போட்டியில் அமெரிக்காவின் பெல்ப்ஸ் மேலும் ஒரு தங்கப் பதக்கம் வென்றார். 100 மீற்றர் நீச்சல் "பட்டர் பிளை" பிரிவில் அவர் முதலிடம் பிடித்தார். இதன்மூலம் அவரது ஒலிம்பிக் தங்க பதக்க வேட்டை 17 ஆக உயர்ந்துள்ளது. ஒட்டு மொத்தமாக அவர் 21 பதக்கங்கள் கைப்பற்றியுள்ளார்.

# போட்டியில் கடைசிதான் ரசிகர்கள் மனதில் முதல்




ஒலிம்பிக்கில் படகுப் போட்டி ஒன்றில் கடைசியாக வந்த நைஜர் நாட்டை சேர்ந்த ஒருவர், தோல்வியடைந்தாலும் ரசிகர்களின் மனதை வென்றிருக்கிறார். கடைசியாக வந்த போதிலும், அவரது முயற்சிக்காக அவர் மக்களின் பலத்த ஆதரவைப் பெற்றிருக்கிறார்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் தான் படகுப் போட்டியில் போட்டியிடுவது என்று தீர்மானித்த ஹமடு டெஜிபோ இசாகா என்னும் இவர் லண்டன் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக ஒரு பழைய மீன்பிடிப் படகில் தனது கடுமையான பயிற்சியை மேற்கொண்டிருக்கிறார்.

ஆண்களுக்கான ஒற்றையர் படகுப் போட்டி ஒன்றில் வெற்றிக் கோட்டை இவர் சுமார் 9 நிமிடங்களுக்குப் பின்னரே கடக்க முடிந்திருக்கிறது. முதலாவதாக வந்த துனிசிய போட்டியாளருக்கு பின்னர் ஒரு நிமிடம் 20 செக்கன்கள் தாமதமாக வந்த அவரை அங்கிருந்த ரசிகர்கள் பலத்த கரகோஷம் செய்து வரவேற்றனர்.

லண்டன் போடிகளில் 32 ஆவதாக (கடைசி இடம்) வந்த போதிலும். படகுப் போட்டியை தொடர்ந்து பயிற்சி செய்வது என்றும், இன்னும் நான்கு வருடங்களில் றியோடி ஜெனிரோவில் நடக்கவிருக்கும் அடுத்த ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்வது என்றும் இசாகா திட்டமிட்டிருக்கிறார்.

# சாய்னாவுக்கு அதிர்ஷ்டம் இந்தியாவுக்கு பதக்கம்



லண்டன் ஒலிம்பிக் போட்டியில் வட்மின்ரன் வீராங்கனை சாய்னா நெஹ்வால் மூலம் இந்தியாவிற்கு மேலும் ஒரு பதக்கம் கிடைத்துள்ளது.

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டியில் மகளிருக்கான ஒற்றையர் வட்மின்ரன் பிரிவில் இந்திய வீராங்கனை சாய்னா நெஹ்வால் அரையிறுதி வரை முன்னேறினார்.

அரையிறுதியில் உலகத் தர வரிசையில் முதலிடத்தில் உள்ள சீனாவின் யிகான் வாங்கிடம் சாய்னா தோல்வியடைந்தார். தங்கப் பதக்கத்தை கோட்டைவிட்ட சாய்னா, வெண்கலப் பதக்கத்தை நிச்சயம் வென்று ஆறுதல் அளிப்பார் என்று அவரது ரசிகர்கள் ஆர்வத்துடன் காத்திருந்தனர்.

இந்நிலையில் வெண்கலப் பதக்கத்துக்கான போட்டியில் சாய்னா, சீன வீராங்கனை ஜின் வாங் என்பவருடன் மோதினார். விறுவிறுப்பாக நடந்த இப்போட்டியின் முதல் செற்றை சீன வீராங்கனை 21-18 என கைப்பற்றினார். இதனால் சாய்னாவுக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டது.

எனவே 2ஆவது செற்றில் சாய்னா ஆக்ரோஷமாக விளையாடினார். ஆனால் இந்த செற்றில் சீன வீராங்கனை 1-0 என முன்னிலையில் இருந்தபோது, தசைப்பிடிப்பு காரணமாக போட்டியிலிருந்து விலகினார். இதனால் சாய்னா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

# சாதித்தார் செரீனா

ஒலிம்பிக் ரென்னிஸ் மகளிர் ஒற்றையர் பிரிவில் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்தார். இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷெரபோவாவுடன் மோதிய செரீனா, தொடக்கத்தில் இருந்தே அதிரடியாக விளையாடி புள்ளிகளை அள்ளினார்.

ஷெரபோவா எதிர்ப்பை எளிதில் முறியடித்த செரீனா 6-0 என்ற கணக்கில் முதல் செற்றை கைப்பற்றி முன்னிலை பெற்றார். இரண்டாவது செற்றிலும் ஆதிக்கம் செலுத்திய அவர் 6-0, 6-1 என்ற நேர் செற்களில் மிக எளிதாக வென்று தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். ஷெரபோவா வெள்ளியுடன் திருப்தி அடைந்தார்.

# நீள்கிறது "மட்ச் பிக்சிங்" விவகாரம் விசாரணை, மேன்முறையீட்டில் அணிகள்

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபெற்ற எட்டு இறகுப் பந்து வீரர்களை, சர்வதேச இறகுப் பந்து சம்மேளம் தகுதி நீக்கம் செய்துள்ளது.

மகளிர் பிரிவின் இரட்டையர் ஆட்டத்தில், காலிறு திக்கு முந்தையப் போட்டியில் தெரிந்தே தோல்விடைய முயற்சி செய்தனர் என்கிற குற்றச்சாட்டு களுக்கு அவர்கள் ஆளாயினர்.

காலிறுதிப் போட்டியில் சுலபமாக வெற்றி பெறக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளும் நோக்கிலேயே அவர்கள் அவ்வாறாக விளையாடினர் என்று குற்றச்சாட்டுகள் எழுந்தன.

தற்போது தகுதி நீக்கம் செய்யப் பட்டுள்ள எட்டு வீராங்கணைகளில் இரு ஜோடி தென்கொரியாவைச் சேர்ந்தவர்கள், மற்ற இரு ஜோடிகள் இந்தோனேஷியா மற்றும் சீனாவைச் சேர்ந்தவர்கள்.

அவர்களின் மோசமான ஆட்டம் காரணமாக ரசிகர்கள் அவர்களை விளையாட்டரங்கில் ஏளனப்படுத்தும் வகையில் குரலெழுப்பினர்.

இந்த வீரர்களின் நடவடிக்கை மிகவும் வேதனையளிக்கக் கூடிய விஷயம் என்றும், லண்டன் போட்டிகளுகே ஒரு அவப்பெயர் என்றும், லண்டன் ஒலிம்பிக் போட்டிகளின் ஏற்பாட்டுக் குழு வின் தலைவரான செபாஸ்ரியன் கோ தெரிவித்துள்ளார்.

இதனிடையே இந்த விடயம் தொடர்பில் சீனா தனது சொந்த விசாரணையை தொடங்கியுள்ளது.

சீனாவின் அரச ஊடகம் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் பெறுவதைவிட, அதில் நேர்மையாக பங்கு பெறுவதே முக்கியமானது என்று தெரிவித்துள்ளது.

ஒலிம்பிக் போட்டியில் அணிகள் குழுக்களாக பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெறுவதாலேயே பிரச்சினைகள் உருவாகின்றன என்று ஒரு அணியின் பயிற்சியாளர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

**மோசமாக ஆடினரா?**

இந்த முறையில் ஒரு போட்டியில் தோல்வியடைவதன் மூலம் அடுத்தச் சுற்றில் சுலபமான ஒரு போட்டியை எதிர்கொள்ளவதை உறுதி செய்துகொள்ள முடியும் எனவும் அந்தப் பயிற்சியாளர் கூறியுள்ளார்.

இதனிடையே லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் பங்குபெறுவதிலிருந்து தமது நாட்டு வீரர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டுள்ளதற்கு எதிராக இந்தோனேஷியா மற்றும் தென்கொரிய அணியினர் மேல்முறையீடு செய்துள்ளனர்.

# சிறுவர்களுக்கு பாதுகாப்பான இணையத் தேடலை ஏற்படுத்தி தர...



இன்றைய உலகில் கற்றுக் கொள்வதற்கும் அறிவுத் தேடலுக்கும் முதல் தேவை இணைய இணைப்பும், இணையத் தேடலும் தான். இதில் அபாயம் தரும் இன்னொரு பக்கமும் உள்ளது. முற்றிலும் கட்டற்ற இணையம் சிறுவர்களுக்கு அபாயகரமானது.

பாலியல் தளங்களும், வன்முறையை போதிக்கும் தளங்களும் இணையத்தில் நிறைந்து கிடக்கின்றன. இவற்றைப் பார்க்காதே என்று ஒரு காவலாளி போல சிறுவர்களை எந்நேரமும் கட்டுப் படுத்துவது இயலாது.

மேலும் வரையறைகளை அமைப்பது இன்றைய டிஜிட்டல் உலகில் பெற்றோர்களுக்கும் சற்று சிரமமான செயல்பாடாக உள்ளது. இயலாததும் கூட.

பெற்றோர் தடை இடுகையில் அதனை மீற வேண்டும் என்ற இயல்பு சிறுவர்களுக்கு இயல்பாகவே தோன்றுவது இயற்கையே.

இந்தச் சூழ்நிலையைச் சமாளிக்க நமக்கு K9 Web Protection என்னும் புரோகிராம் நமக்கு உதவுகிறது. இணையத்தில் இலவசமாகக் கிடைக்கும் இந்த புரோகிராம் வீடுகளில் பயன்படுத்தும் கணனிகளில் கட்டுப்பாடுகளை விதிக்க உதவுகிறது. இதன் மூலம் எப்பொழும் கணனி கட்டுப்பாட்டுடன் வைக்க முடியும். உங்கள் குழந்தைகளை இணையம் தரும் தீமைகளிலிருந்து பாதுகாக்க உதவிடும்.

இதன் சிறப்பம்சங்களாவன:

பாலியல், போதை மருந்து, தனிநபர் டேட்டிங், வன்முறையைப் போதிப்பது, வெறுப்பினை வளர்ப்பது, இனவேறு பாட்டினைத் தூண்டுவது என 70க்கும் மேற்பட்ட பல்வேறு பிரிவுகளாக, இணைய தளங்களைப் பிரித்து வைத்து தடுக்கலாம்.

குழந்தைகளின் வயதின் அடிப்படை யில், தடுப்பு நிலைகளை அமைக்கலாம். அனைத்து தேடல் சாதனங்களிலும், Safe Search என்ற ஒன்றை இயக்கி வைக்கலாம். குறிப்பிட்ட நேரத்தில் இணையத் தொடர்பினை ஏற்படுத்த இயலாமல் செட் செய்திடலாம்.

எப்போதும் அனுமதி மற்றும் எப்போதும் தடை செய்திடு என இருவகைகளாக இணையத்தளங்களைப் பிரித்து அமைக்கலாம். பெற்றோர் அமைத்திடும் பாஸ்வேர்ட் மற்ற பாஸ்வேர்ட்களையும் மீறி இருக்கும் வகையில் அமைக்கலாம்.

கணனி தொழில் நுட்பம் சற்று அதிகம் தெரிந்து பயன்படுத்துபவர்கள் கூட, மீட்டெடுக்க முடியாத தடைகளை உருவாக்கலாம். தடை செய்யப்பட்ட தளங்களைப் பார்த்தால், அது குறித்த அறிக்கை தரும்படி அமைத்திடலாம். விண்டோஸ் மட்டுமின்றி, மேக் கணனிகளில் இயங்கும் வகையிலும் இது தரப்படுகிறது.

K9 Web Protection என்ற இந்த புரோகிராம், மைக்ரோசாப்ட் விண்டோஸ் 7, விண்டோஸ் விஸ்டா, விண்டோஸ் எக்ஸ்பி, மேக் ஓ.எஸ். எக்ஸ் 10.4.7 மற்றும் அதற்கும் மேற்பட்ட சிஸ்டங்களில் இயங்குகிறது.


இதனை தரவிறக்கம் செய்து நிறுவச் செய்திடுகையில், லைசன்ஸ் கீ தரும்படி இந்த புரோகிராம் கேட்கும் ■

---

அனைவரும் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கும் விண்டோஸ் 8 இயங்குதளம் பொதுமக்களுக்கு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி வழங்கப்படும் என மைக்ரோசாப்ட் அறிவித்துள்ளது.

மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொண்டு கணணிகளைத் தயாரித்து வழங்கும் நிறுவனங்கள், தங்கள் கணணிகளில் இதனை பதிந்தே விற்கும். எனவே ஒரு விண்டோஸ் 8 சிஸ்டம் கொப்பி, அது பதியப்படும் மதர் போர்டுடன் மட்டுமே செயல்படும். அதனை மற்ற மதர்போர்டு உள்ள கணணிக்கு மாற்ற முடியாது.

## ஒக்டோபர் 26ஆம் திகதி வெளியாகிறது




எனவே இன்னொரு புதிய பர்சனல் கம்ப்யூட்டருக்கு மாற வேண்டும் என எண்ணினால், புதிய விண்டோஸ் 8 ஒன்று வாங்க வேண்டியிருக்கும்.

ஏற்கனவே உள்ள இயங்குதளங்களை, விண்டோஸ் 8 சிஸ்டத்திற்கு அப்கிரேட் செய்திட விரும்புபவர்களுக்கு, அதற்கான கட்டணமாக 40 டொலர் செலுத்திய பின்னர் உரிமம் வழங்கப்படும். மூன்று வாரங்களுக்கு முன்னர், ஒக்டோபர் இறுதியில் வெளியிடப்படும் என நாள் குறிக்காமல், மைக்ரோசாப்ட் அறிவித்திருந்தது.




மைக்ரோசாப்ட் நிறுவனத்தைப் பொறுத்தவரை, விண்டோஸ் 8 இயங்குதளம் அதன் வரலாற்றில் ஒரு புதிய திருப்பத்தினை உண்டாக்கப் போகிறது.

முதல் முறையாக இரு வேறு வகை கணணி சாதனங்களில் இயங்கும் வகையில் ஓர் இயங்குதளத்தினை மைக்ரோசாப்ட் வழங்க இருக்கிறது.

2011ஆம் ஆண்டில் நுகர்வோருக்கான எலக்ட்ரானிக்ஸ் சாதனங்களுக்கான கண்காட்சியில், விண்டோஸ் 8 குறித்த திட்ட வரைபை மைக்ரோசாப்ட் வெளியிட்டது.

மைக்ரோசாப்ட் விண்டோஸ், வீடு மற்றும் வணிக கணணிகள், லேப்டாப்கள், நெட்புக்குகள், டேப்லெட் கணணிகள், மற்றும் ஊடக மையம் கணணிகள் உட்பட தனிநபர் கணினிகளில் பயன்படுத்த மைக்ரோசாப்ட் உற்பத்தி இயக்க முறைமைகளில் ஒரு புதிய தொடராகும்.

மூன்று ஆண்டுகளுக்கு முன் அதன் முன்னோடி பதிப்பாகிய விண்டோஸ் 7 வெளியீட்டிற்கு பிறகு. விண்டோஸ் 8 சேவையகம் என்னும், விண்டோஸ் சர்வர் 8, விண்டோஸ் 8 இரண்டும் ஒரே நேரத்தில் கூடிய உருவாக்கம் ஆகும். இதன் முன் வெளியீட்டு பதிப்பு மாசி 29, 2012 இல் நுகர்வோர் முன்பார்வையாக வெளியாகி உள்ளது.

---

இப்போது ஆன்லைன் மூலம் பல வேலைகளைச் சுலபமாகச் செய்வது அதிகரித்து வருகிறது. இருந்த இடத்தில் இருந்தபடி தொலைபேசி பில் கட்டுவது போன்ற பல வேலைகளையும் செய்துகொள்ள முடிகிறது. ஆனாலும், ஆன்லைன் வசதியை பயன்படுத்த பலரும் தயங்கவே செய்கிறார்கள். காரணம், நம் கணக்கு களவு போய்விடுமோ என்கிற அச்சம்தான்.



## உங்கள் பாஸ்வேர்டு வலிமையானதா?

நம்மில் பெரும்பாலோர் ஆன்லைன் பாஸ்வேர்டு அமைத்துக் கொள்ளும்போது 123456 அல்லது யடிஉனந அல்லது நம் பெயர் என்கிற ரீதியிலேயே அமைத்துக் கொள் கிறோம். இதனால் நம் பாஸ்வேர் டுகளை எளிதில் உடைத்து, நம் ஆன்லைன் அக்கவுண்டுக்குள் புகுந்து, பணத்தைச் சுருட்டி எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள் "நெட்" கொள்ளையர்கள். பலவீனமான பாஸ்வேர்டுகள், மோசடிக்கான கதவை எளிதில் திறந்துவிடுகிறது.




அமெரிக்க தொலைக்காட்சி சேனல் வெரிசன் நடத்திய ஆராய்ச்சி ஒன்றில், "சுலபமாக ஊகிக்கக்கூடிய பாஸ்வேர்டுகளை வைத்திருப்பதே ஆன்லைன் மோசடி பிரச்னைக்கு மூல காரணம் என்கிறது."“பாஸ்வேர்டு என்பது நினைவில் நிற்பதாகவும், பாதுகாப்பானதாகவும் இருக்க வேண்டும்.நம்மவர்கள் நினைவில் நிற்பது போல் சுலபமான பாஸ்வேர்டை தேர்வு செய்கிறார் கள். ஆனால், அது பாதுகாப்பானதாக இல்லை என்பதே பெரிய குறைபாடு.



ஆன்லைன் பாதுகாப்பைப் பலப்படுத்த என்ன செய்யலாம் என செக்யூரிட்டி ஆராய்ச்சியாளர்கள் மூளையைப் போட்டு குழப்பியதன் விளைவு, நம் பாஸ்வேர்டு வலிமையாக இருக்க வேண்டும் என்று கண்டுபிடித்தார்கள். வலிமையான பாஸ் வேர்டு என்றால்..? "ஒன்றுக்கு ஒன்று தொடர்பு இல்லாத எழுத்துக்கள் மற்றும் எண்களாக இருப்பதுதான் வலிமை யான பாஸ்வேர்டு. இந்த பாஸ்வேர்ட்டை அடிக்கடி மாற்றிக் கொண்டே இருந்தால், எந்த கொம்பனாலும் உங்கள் பாஸ்வேர்ட்டை உடைக்க முடியாது" என்கிறார்கள் அவர்கள்.

---

## சர்வதேச நேரத்தைக் கணிக்க





**வெளிநாட்டு** நேரத்தைக் கண்டு பிடிப்பது சுலபமான ஒன்றுதான். ஆனால் பல இணையத்தளங்கள் விளம்பரம் ஒன்றைக் கொடுத்து நம்மை வெறுப்படையத் செய்து விடுகின்றன. கூடவே நாட்டையும் சொடுக்கித்தான் நேரத்தைப் பார்க்க வேண்டும் என்று சொல்லும் தளங்களுக்கு மத்தியில் எளிதாக கூகிள் வரைபடம் வழியாகவே எல்லா நாட்டு நேரத்தையும் நொடியில் காட்டுகிறது.

**இணையத்தள முகவரி:** http://www.qclock.com/time/gmaps.php

இத்தளத்திற்கு சென்று நாம் படத்தில் காட்டியபடி கூகிள் வரைபடத்தில் எந்த நாட்டு நேரத்தை தெரிந்துகொள்ள வேண்டுமோ அந்த நாட்டின் பெயர் அல்லது அந்த இடத்தின் அருகில் சுட்டியை கொண்டு சென்றால் போதும் உடனடியாக அந்த நாட்டின் நேரம் என்ன என்பதை தெளிவாக நமக்குக் காட்டுகிறது.

கூட்டம் என்று சிறப்பாகக் கூறப்படும். இந்தப் பொதுச்சபைக் கூட்டத்தில்தான் அடுத்த வாரத்தில் பண்ணையில் நடக்கவேண்டிய வேலைகள் எல்லாம் நிர்ணயிக்கப்படும். பல சமயங்களில் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டு விவாதிக்கப்படும். தீர்மானங்களைக் கொணர்ந்தவை பன்றிகள்தான். மற்ற விலங்குகளுக்கு வோட்டளிக்கத் தெரியுமே தவிர தாமாக எந்தவிதத் தீர்மானத்தையம் பிரேரித்துப் பேசத் தெரியாது.

இந்தத் தீர்மானங்களைப் பற்றிய விவாதங்களிலெல்லாம் அதிகமாகக் கலந்துகொண்டவை ஸ்நோபாலும் நெப்போலியனும். ஆனால் அவை இரண்டும் எந்த விஷயம் பற்றியும் ஒத்துப்போவதில்லை என்பது சீக்கிரமே தெளிவாகத் தொடங்கியது. மற்ற விலங்குகளின் கவனத்துக்கும் இந்த வித்தியாசங்கள் வெகுசீக்கிரமே தெரியவந்தன. இரண்டில் ஒன்று ஏதாவது யோசனை சொன்னால் உடனே மற்றது அதை ஆட்சேபிக்கக் குதித்து எழுந்துவிடும்.




சாதாரணமாக யாரும் ஆட்சேபம் சொல்ல முடியாத விஷயங்களைப் பற்றியும்கூட விவாதங்கள் பிரமாதமாக நடைபெறும். உதாரணமாக பழத் தோட்டத்துக்கு அப்பாலுள்ள வயலை வயது முதிர்ந்த வேலைக்கு லாயக்கற்ற விலங்குகளின் உபயோகத்துக்கென்று ஒதுக்கிவைப்பது என்கிற விஷயம் விவாதத்துக்கு வந்தால், இதில் விவாதம் மிகவும் கடுமையாக நடக்கும்.


ஒவ்வொரு விலங்கு வர்க்கமும் எந்த வயதில் வேலையிலிருந்து விலகிக் கொள்ளலாம் என்பது பற்றி ஓயாமல் தர்க்கம் செய்யப்படும். இந்தக் கூட்டங்கள் எல்லாம் "இங்கிலாந்தின் விலங்குகள்" என்கிற பாட்டுடன் தான் முடியும்.

சாதாரணமாக ஞாயிற்றுக்கிழமை மாலைகளில் ஏதாவது பொழுதுபோக்கான மனதுக்கு உற்சாகம் அளிக்கிற விளையாட்டுகளில் விலங்குகள் ஈடுபடும். முன்பு சேணங்கள் முதலியன வைக்கப்பட்டிருந்த கொட்டகையைத் தலைமைக் காரியாலயமாகப் பன்றிகள் தங்களுக்கென்று ஒதுக்கிவைத்துக் கொண்டன. இங்கே மாலை வேளைகளில், பன்றிகள் அவசியமான பல தொழில்களைக் கற்றுக் கொண்டன. பண்ணை வீட்டிலிருந்து கொணர்ந்த புத்தகங்களின் உதவியால் அவை தச்சு வேலை, இரும்புப் பட்டறை வேலை முதலியவற்றைக் கற்றுக்கொண்டன.

ஸ்நோபால் மிருகங்கள் பலவற்றைக் கூட்டி பல கமிட்டிகள் அமைப்பதில் காலத்தைப் போக்கியது. இந்த வேலையில் அதற்கு அலுப்பு ஏற்படுவதே கிடையாது. கோழிகளுக்காக முட்டையிடும் கமிட்டி ஒன்று, பசுக்களுக்காக வால்கள் சுத்தமாக வைத்துக்கொள்ளும் கமிட்டி ஒன்று, காட்டு மிருகங்களுக்கும் கல்வி புகட்டும் கமிட்டி ஒன்று (இதன் லட்சியம் எலிகளையும் முயல்களையும் வீட்டு மிருகங்களாகப் பழக்குவது தான்) ஆடுகளுக்காக வெண்மையான ரோமம் உற்பத்திக் கமிட்டி ஒன்று.


(நாளை...)

## வரைவோம் வாருங்கள்!



## சிறுவர் அமுதம்

## மண்புழு



மண்புழுக்களில் அல்லது மழைப் புழுக்களில் பல வகைகள் உண்டு. பொதுவாக மண்புழுவனாது, வளைத்தசை உருளைப்புழுக்களின் தொகுதியின் கீழ் அமைகிறது. இது உழவர்களின் நண்பன் என்று புகழப்படுகிறது. ஏனெனில், தாவரக்கழிவுகளை உண்டு, அதனால் அதன் உடலிலிருந்து வரும் செரிமானக் கழிவால், அதன் வாழிட மண்ணை வளப்படுத்துகின்றன. இவற்றின் வாழ்க்கைச் சுழற்சியால் மண்ணானது, மேலும் மிருதுவாக மாறுகிறது. மண்ணில் காற்றோட்டமும், நீரும் அதிகம் தங்கி விடுவதால், தாவர வேர்கள் அதிகத் தேவைகளை அடைகிறது.

இதன் உருளைவடிவமான உடல், பல கண்டங்களாக பிரிக்கப்பட்டது போல, வெளித் தோற்றத்தில் உள்ளளது. உடலின் நுனி முதல், உடலின் அடி (மலப்புழை வரை) வரை, நீண்ட குழாய் போன்ற வாய்திறப்பு உள்ளது. முன்நுனிக்கு அருகே உடல் சற்று பருத்துக்காணப்படுகிறது. தசைநார்கள் சுருங்கும் போது, மண்புழு அளவில் சிறியதாகி, உடல் பருத்து விடும். வளைத்திசுக்கள் சுருங்கும் போது, மண்புழுவின் உடல் நீண்டு விடும். இப்படி மாறி மாறி நார்தசைகள் இயங்குவதால், மண்புழு இடம் பெயருகிறது.

பெருந்தொகையான நுண்ணிய தோல்முடிகள், இந்த இயக்கத்திற்கு துணை புரிகின்றன. வளைத்திசுக்கள் சுருங்கும் போது, இந்த முடிகள் உடலின் பின்பகுதியை அசையாது பிடித்துக்கொள்கிறது. இதனால் உடலின் முன் நுனி நீள்கிறது. அதேபோல, முன் நுனியின் முடிகள் பிடித்துக் கொள்ளும் போது, பின்பக்க உடல், முன்னே இழுக்கப்படுகிறது.

உடலின் முன்நுனியிலுள்ள வாய் மண்ணை விழுங்கி, உடலின் இறுதிவரை அனுப்பும் போது செரிமானம் நடைபெறுகிறது. மழைப்புழுவின் அடிப்பகுதி மேற்பகுதியை விட சற்று தட்டையாக இருக்கிறது. முன், பின் உடலானது சமமாக அமைந்து, இது இருபக்கச் சமச்சீர் உடலி என்ற பெயரினைப் பெறுகிறது.

## வேண்டும் முயற்சி



சிலந்தி வலையைப் பாருங்கள்
சின்னஞ் சிறிய பூச்சியே
வளைந்து வளைந்து புதுமையாய்
வட்ட வலையைப் பின்னுமே
தேனிக்கூட்டைப் பாருங்கள்
திறமையோடு ஒற்றுமையாய்
பெரிய முயற்சி வேண்டுமே
பேணி வீட்டைக் கட்டுமே
எறும்புப் புற்றைப் பாருங்கள்
எள்ளைப் போன்ற எறும்புகள்
அருமையான முயற்சியால்
அழகுப் புற்றைச் செய்தன
குருவிக் கூட்டைப் பாருங்கள்
குடுக்கை போன்று பின்னியே
விரைவில் கட்டி முடிக்குமே
வேண்டும் முயற்சி என்றுமே


## விடுகதைகள்




1.ஓடையில் ஓடாத நீர், ஒருவரும் குடிக்காத நீர். அது என்ன?
2.வீட்டுக்கு வந்த விருந்தாளியை வரவேற்க ஆளில்லை. அது என்ன?
3.ஓயாமல் இரையும் இயந்திரமல்ல, உருண்டோடி வரும் பந்தும் அல்ல அது என்ன?
4.வீட்டிலிருப்பான் காவலாளி, வெளியில் சுற்றுவான் அவன் கூட்டாளி, அவர்கள் யார்?
5.எத்தனை தரம் சுற்றினாலும் தலை சுற்றாது, அது என்ன?

விடைகள்: 1.கண்ணீர் 2.செருப்பு 3.கடல் 4.பூட்டும் சாவியும் 5.மின்விசிறி

## நம்பியோரை மோசம் செய்யாதே!



அரவிந்தன், வெளியூருக்கு செல்ல வேண்டியிருந்தது. அதனால் தன் சொத்துக்களைப் பாதுகாக்க தன் நண்பன் பத்மன் என்பவனை நம்பி ஒப்படைத்துவிட்டு சென்றான்.அரவிந்தனின் நிலங்களின் நடுவே ஒரு குளம் இருந்தது. அக்குளத்தில் பலவகையான மீன்கள் வளர்க்கப்பட்டன. ஒரு நாள் மீனுக்கு ஆசைப்பட்ட பத்மன், வலைவீசி மீன்களைப் பிடித்தான். அச்சமயம் ஊருக்கு சென்றிருந்த அரவிந்தன் திரும்பி வந்தான்.தன் சொத்துக்களைப் பாதுகாக்க அமர்த்தப்பட்ட தன் நண்பன் பத்மன் குளத்தில் மீன்களைப் பிடிப்பதைக்கண்டு "மற்றவர்கள் தவறு செய்யாமல் பார்த்துக் கொள்ள வேண்டிய நீயே தவறு செய்கிறாயே?" என்று வருத்தத்துடன் கேட்டான். பத்மன், தன்னை நம்பிய நண்பனுக்கு துரோகம் செய்து விட்டதை எண்ணி பின்னர் வெட்கமடைந்தான்.

## சுடோக்கு எண் 22 விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 2 | 5 | 8 | 9 | 4 | 1 | 7 | 6 |
| 8 | 6 | 9 | 7 | 1 | 3 | 5 | 4 | 2 |
| 4 | 1 | 7 | 5 | 2 | 6 | 8 | 9 | 3 |
| 2 | 4 | 1 | 9 | 3 | 8 | 7 | 6 | 5 |
| 9 | 7 | 6 | 4 | 5 | 2 | 3 | 8 | 1 |
| 5 | 3 | 8 | 1 | 6 | 7 | 4 | 2 | 9 |
| 6 | 5 | 4 | 2 | 7 | 1 | 9 | 3 | 8 |
| 7 | 9 | 3 | 6 | 8 | 5 | 2 | 1 | 4 |
| 1 | 8 | 2 | 3 | 4 | 9 | 6 | 5 | 7 |

## சுடோக்கு எண் 23

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | | | 1 | | | 7 | | |
| | 9 | 3 | 2 | | | | | 4 |
| | 5 | | | 7 | | | 3 | 2 |
| | | 1 | 6 | 2 | | | | |
| | | | | 4 | | | | |
| | | | | 8 | 9 | 4 | | |
| 9 | 3 | | | 6 | | | 2 | |
| 6 | | | | | 2 | 3 | 9 | |
| | | 8 | | | 3 | | | 7 |

## குழந்தைகளே!

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# நல்லைக் கந்தன் மஹோற்சவ கட்டுரைப் போட்டி பரிசளிப்பு விழா

நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.மாநகரசபை யினால் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் மூன்று பிரிவுகளிலும் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடத்தைப் பெற்றவர்களுக்கான பரிசும், சான்றிதழ்களும் இன்று (திங்கட்கிழமை) வழங்கப்படும்.

இன்று காலை 10.00 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும் நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழாவின் போது யாழ்.மாநகர சபை முதல்வர் பரிசில்களை வழங்குவார்.

பரிசு பெற்ற மாணவ மாணவிகள் நேரடியாக வருகை தந்து தத்தமக்குரிய பரிசையும் சான்றிதழையும் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம்- செல்வி.கஸ்தூரி பரமானந்தம் (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), 2ஆம் இடம்- செல்வி.மேரி ஜெனேசியா (யா/பாசையூர் சென்.அன்ரனீஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம்), 3ஆம் இடம்- செல்வன். வி.சிந்துஜன் (யா/பரியோவான் கல்லூரி).

**மத்திய பிரிவு**

1ஆம் இடம்- செல்வி ஜெ. செந்தூரி (யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்), 2ஆம் இடம்- செல்வி. யூசலோமி (யா/பாசையூர் சென். அன்ரனீஸ் றோ.க.மகளிர் வித்தியாலயம்), 3ஆம் இடம்- செல்வி .யோ.கவிநிலா (யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்).

**மேற்பிரிவு**

1ஆம் இடம்- செல்வி.ஸ்ரீ. உமையாள் (வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), 2ஆம் இடம்- செல்வி ம.நிதுசாளினி (யா/வைத் தீஸ்வராக் கல்லூரி), 3ஆம் இடம்- செல்வி அ.நளினாசினி (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி).

# ஆலயத்தில் கௌரவிப்பு

(மருதனார்மடம்)

வயாவிளான் கோணாவளை அருள்மிகு முத்துமாரி அம்மன் கோயில் அலங்கார உற்சவம் நிறைவடைந்தது. ஆலயத்தில் உற்சவகாலத்தின்போது தொடர் சொற்பொழிவாற்றிய அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் சைவசித்தாந்த கலாநிதி சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசனுக்கு ஆலய பரிபாலன சபைப் பொருளாளர் ச. முத்துலிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

பரிபாலசபைத் தலைவர் க. கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சிவஸ்ரீ கி. ஜோதீஸ்வரக்குருக்கள் ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து பிரதம குருவுக்கு பரிபாலசபைத் தலைவர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள் உதவிக்குரு க.நவரத்தினம் ஐயாவுக்கும் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது.

பரிபாலன சபை செயலாளரின் நன்றியுரையைத் தொடர்ந்து கௌரவிப்பு நிகழ்வு நிறைவடைந்தது. (01)

# நல்லூரில் புராண படன நிகழ்ச்சி

(மருதனார்மடம்)


நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மகோற்சவத்தையொட்டி ஆலய சூழலில் தினந்தோறும் மாலை வேளையில் ஆன்மீக நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

ஆலய வடகிழக்கு மூலையில் அமைந்துள்ள நடராஜா பரமேஸ்வரி மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணியளவில் புராண படன நிகழ்வு இடம்பெறவுள்ளது. கந்தபுராணத்தில் ஒரு காட்சியாக திருப்பெருவடிவம் எடுத்த பகுதியை புராண படனமாக நிகழ்த்தவுள்ளார்கள்.

சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் செ. கந்த சத்தியதாசன்,தீவக வலய சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் சக்திதாசர் நா. இராதாகிருஷ்ணன், சைவப்புலவர் ஏ. அனுசாந்தன் ஆகியோர் பங்குபற்றுகின்றார்கள்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் புராணபடன நிகழ்ச்சியைக் கேட்டுப்பயன் பெறலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர். (01)

# சரவணை சின்னமடு மாதா வருடாந்தப் பெருவிழா



ஊர்காவற்றுறை சரவணை சின்னமடு மாதா ஆலய வருடாந்தப் பெருவிழா நேற்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்றது. யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் தலைமைதாங்கி விழாவை நடத்திவைத்ததுடன் திருப்பலியையும் நிறைவேற்றினார். இந்நிகழ்வில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

மாதாவின் திருச்சுரூப பவனிக் காட்சியை படத்தில் காணலாம்.

# ஆன்மீகப் பெருவிழா

(மருதனார்மடம்)

சர்வதேச இந்துமத குருபீடம் அமைக்கப்பெற்று பதினைந்தாவது ஆண்டு நிறைவு பெறுவதோடு அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடத்தின் முப்பதாவது ஆண்டும் நிறைவடைகின்றது. இவ்விரு ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் இந்து சமய ஆன்மீகப் பெருவிழாவொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இவ்விழா இம்மாதம் 24, 25, 26 ஆகிய மூன்று தினங்களும் நடைபெறத் திட்டமிடப்பட்டுள்ளது. சர்வதேச இந்து மத குருபீட திபதியும் அகில இலங்கை சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதியுமாகிய ஆன்மீக அருள் ஜோதி கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவசாரியார் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்விழாவில் பல்துறை சார்ந்த பிரமுகர்கள் 180 பேருக்கு பட்டமளித்து விருது வழங்கி கௌரவிக்கவுள்ளார்கள்.

இவ் விழாவில் சிறப்பு மலர் வெளியீடும் இடம்பெறவுள்ளது என்று சர்வதேச இந்துமத குரு பீடத்தின் யாழ். மாவட்ட நிர்வாகப் பணிப்பாளர் பிரமஸ்ரீ நித்யசுதனாந்தசர்மா தெரிவித்துள்ளார். (01)


# வரலாற்றுப் பெருமைமிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில்

ஈழநாட்டின் வரலாற்றுப் புகழ் மிக்க முருகவழிபாட்டுத் தலங்களுள் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயமும் ஒன்றாகும். நல்லூர்க் கந்தனை அலங்காரக் கந்தன் என்று சிறப்பாகக் கூறுவர். இவ்வாலயத்தில் முருகனைத் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகள், யோகர்சுவாமி முதலியோர் வழிபட்டு வீதிகளில் உலாவி வந்திருப்பது இங்கு உள்ள மக்களுக்குப் பெருமை சேர்க்கின்றது. இத்தகைய சித்தர்கள் வழிபட்ட ஆலயத்தில் நடைபெறும் வழிபாட்டு முறையினைச் சற்று நோக்கும்பொழுது நித்திய நைமித்தியக் கிரியைகள் காலம் தவறாது நடைபெறுகின்றன. இங்கு ஆவணி அமாவாசையைத் தீர்த்தமாகக் கொண்டு இருபத்தைந்து நாட்களுக்கு மகோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. மகோற்சவ காலங்களில் தங்கரதம், கயிலாயவாகனம், வேல்விமானம், மஞ்சம், சந்தான கோபாலர் உற்சவம், கஜவல்லி மகாவல்லி உற்சவம், பழனியாண்டவர் உற்சவம், கார்த்திகைத் திருவிழா என்பன ஏனைய ஆலயங்களைவிட இங்கு சிறப்பாக நடைபெறுவதைக் காணலாம்.

(அகில இலங்கை இந்து மாமன்ற பொன்விழா சிறப்பு மலர்)

# நல்லைக் கந்தன் மகோற்சவம்

இன்று பதினான்காம் நாள்



### வேலொரு கையுடன் மேவிடம் நல்லை

மாலினை மாமனாய்ப் பெற்றதன் மகிமையால்
சேலினும் கண்ணியர் யானையும் வள்ளியும்
மாலுற தீரவும் மாண்மணஞ் செய்தவர்
வேலொரு கையுடன் மேவிடம் நல்லையே!

- பண்டிதர் சி. கார்த்திகேசு

### காத்தருள்வாள் கார்த்திகேயனே!

கந்தனே கார்த்தி கேயனே சிவனின்
மைந்தனே மயிலவா கனனே நல்லை
வந்துறையும் முத்துக் குமரனே உனையே
வந்தனை செய்திரோம் எம்துயர் தீர்த்திட
வந்திடை வாயோ சண்முக நாதனே
சிந்தை கொள்... சிவகுரு நாதனே
தந்தைக்கே குருவான ...
ஐந்து கரத்தவன் தம்பியே அருள்...
தந்தெமைக் காப்பாய் சூரசங் காரனே!

- ப. மகேந்திரதாசன், சங்குவேலி வடக்கு.

### முன்னேற வழிகாட்டு முருகா!

முன்னேற வழிகாட்டு
முதலுதவி செய்யும் முதலே!
முந்திப்பட்ட வடுக்க ளெல்லாம்
முனகிக் கொண்டு இருக்கின்றதே! - நல்லூர்
முருகா என்று கைவிரித்தவுடன்
முட்டி மோதி ஓடுகின்றதே!
முடிவெடுத்தோம் தமிழிற்கு நீதான்
முற்றுப் புள்ளியி லிருந்துதான்
முற்றத்துக் கோலம் உருவாகும் என்று!

- ஜெயம் ஜெகன், புதுக்குடியிருப்பு

# இன்றைய சிறப்பு நிகழ்ச்சிகள்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் சிறப்பு நிகழ்ச்சித் தொடரில் இன்று சிவ. உமாசுதன் "கந்தன் கருணை" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகிறார்.

மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகும் இன்றைய நிகழ்வின்போது இளவாலை துணைவி அறநெறிப் பாடசாலை, இளவாலை ஆல்சடை ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை, மற்றும் வேலணை வங்களாவடி ஸ்ரீ முருகன் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்ச்சிகளுடன், புஸ்பமலர் யோகநாதனின் மாணவர்கள் வழங்கும் இன்னிசைக் கச்சேரியும் சிறப்பு அம்சங்களாக இடம்பெறவிருக்கின்றன. (க)

## துர்க்காதேவி மணி மண்டபத்தில்

நல்லூர் இளங்கலைஞர் மன்றம், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்து நடத்தும் தெய்வீக இசை அரங்கு நிகழ்ச்சித் தொடரில் இன்று திருமதி குணபூஷணம் வழங்கும் இன்னிசை இடம்பெறுகிறது.

மாலை 7.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும் இந்நிகழ்வின்போது ஏ. ஜெயராமன் (வயலின்), எஸ். மகேந்திரன் (மிருதங்கம்), ஆர். சிவராமன் (கெஞ்சிரா) ஆகியோர் பக்கவாத்தியம் வழங்குவர்கள். (க)


## நடராசா பரமேஸ்வரி மணி மண்டபத்தில்

சைவத் தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடந்துவரும் தெய்வீகப் பேருரைத் தொடரில் இன்று சைவப்புலவர் நித்திய தசிதரன் "கலியுகத்தில் கண்கண்ட தெய்வம்" என்ற பொருளில் சொற்பொழிவாற்றுகிறார்.

மாலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வு கழகத்தின் அமைப்பாளர் மதுரகவி காரை எம்.பி. அருளானந்தன் தலைமையில் இடம்பெறும். (க)

# உலக பார்வை

## எனது முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் ஆதரவளிக்கவில்லை: கொபி அனான் கவலை



சிரியாவில் அமைதி ஏற்படுத்துவதற்கான என்னுடைய முயற்சிக்கு போதிய ஆதரவு கிடைக்கவில்லை என கொபி அனான் வருத்தம் தெரிவித்துள்ளார்.

சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் அசாத்தை பதவி விலகக் கோரி கடந்த 19 மாதங்களாக போராட்டம் நடந்து வருகின்றது.

போராட்டக்காரர்களை ஒடுக்க, சிரிய இராணுவம் நடத்திய தாக்குதலில் 20 ஆயிரம் பேர் வரை கொல்லப்பட்டுள்ளனர். தற்போது போராட்டக்காரர்களுக்கு அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் மறைமுக ஆதரவு அளித்து வருகின்றன.

இதன் காரணமாக, அலெப்போ மாகாணத்தில் போராட்டக்காரர்கள் நவீன ஆயுதங்களுடன் அரசு படைகளை எதிர்த்து வருகின்றனர்.

சிரியாவில் நடக்கும் சண்டைக்கு முற்றுப்புள்ளி வைக்க, அரபு நாடுகளின் சார்பில் அமைதி நடவடிக்கை தூதராக கடந்த பிப்ரவரி முதல் கொ பி அன்னான் செயல்பட்டார். இதற்கிடையே நேற்று முன்தினம் அவர் தனது பதவியை ராஜினாமா செய்தார்.

இது குறித்து அவர் குறிப்பிடுகையில், அமைதி திட்டத்திற்காக நான் மேற்கொண்ட முயற்சிக்கு, சர்வதேச சமூகம் எனக்கு போதிய ஆதரவளிக்கவில்லை.

இது தொடர்பாக ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலிலும் ஒத்த கருத்து ஏற்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

## ஈரானின் ஏவுகணை சோதனை வெற்றி



ஈரானில் குறுகிய தூர இலக்குகளைத் தாக்கும் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டதாக அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அமைச்சர் அகமது வாஹிதி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அகமது வாஹிதி கூறுகையில், படேஹ்-110 என்று பெயரிடப்பட்டுள்ள அந்த ஏவுகணை முன்னதாக 200 கி.மீ தூர இலக்குகளை மட்டுமே தாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருந்தது.

ஆனால் தற்போது அதன் திறனை மேம்படுத்தி 300 கி.மீ தூர இலக்கைத் தாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

திட எரிபொருள் மூலம் இயங்கும் இந்த ஏவுகணையைக் கொண்டு தரை மற்றும் கடலில் உள்ள இலக்குகளைத் தாக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

இதுமட்டுமல்லாமல் ஏற்கனவே ஈரான் வசம் 2 ஆயிரம் கி.மீ தூரத்தில் உள்ள இலக்கைத் தாக்கும் திறன் கொண்ட ஷாகாப் - 3 என்ற ஏவுகணை உள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த ஏவுகணையைப் பயன்படுத்தி இஸ்ரேல், தெற்கு ஐரோப்பாவில் உள்ள நாடுகள் மீது ஈரானால் தாக்குதல் நடத்த முடியும்.

## காதலித்ததால் மகளை கௌரவ கொலை செய்த பெற்றோர்





காதலித்த மகளை கௌரவ கொலை செய்த பெற்றோருக்கு இங்கிலாந்து நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது.

இங்கிலாந்தில் வசிப்பவர் இப்திகார் அகமது(வயது 52). இவரது மனைவி பர்சானா அகமது (வயது 49). பாகிஸ்தான் வம்சாவளியை சேர்ந்தவர்கள்.

இவர்களுக்கு ஷபிலியா(வயது 17), அலீஷா (வயது 15) ஆகிய 2 மகள்கள். இவர்கள் செஷயரில் உள்ள வாரிங்டன் பகுதியில் அபார்ட்மெண்டில் வசித்தனர்.

கடந்த 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஷபிலியா திடீரென காணாமல் போனார். ஆறு மாதங்களுக்கு பிறகு, கெண்ட் ஆற்றங்கரையோரம் ஷபிலியா கொலை செய்யப்பட்டு கிடந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இதுதொடர்பான வழக்கில் அவரது பெற்றோர் மீது குற்றம் சாட்டப்பட்டது. விசாரணையில் இங்கிலாந்து வாலிபர் ஒருவரை ஷபிலியா காதலித்ததும் மேற்கத்திய கலாசாரப்படி உடை உடுத்தியதற்கு பெற்றோர் எதிர்ப்பு தெரிவித்ததும் தெரிய வந்தது.

மேலும் பாகிஸ்தானில் உள்ள வாலிபருக்கு ஷபிலியாவை திருமணம் செய்து வைக்க அனுப்பி வைத்துள்ளனர். பத்து வயது மூத்தவரான அவர் ஷபிலியாவை திருமணம் செய்து கொள்ள மறுத்து விட்ட நிலையில் மீண்டும் இங்கிலாந்து வந்துள்ளார் ஷபிலியா.

கடந்த 2003ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஷபிலியாவை வீட்டில் சித்ரவதை செய்து பெற்றோரே கொலை செய்தனர் என அலீஷாவும் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இந்த வழக்கு செஸ்டர் கிரவுன் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதி, ஷபிலியாவின் பெற்றோருக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

## பேரழிவிற்கு உள்ளான ஹிரோஷிமா: முன்னாள் ஜனாதிபதியின் பேரன் அஞ்சலி



இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானின் ஹிரோஷிமா நகர் மீது முதன் முறையாக அணு குண்டு வீசப்பட்டது.

இரண்டாம் உலகப் போரின் போது (1939-1945) ஜப்பானின் இரு பெரும் நகரங்களான ஹிரோஷிமா, மீது முதல் அணு குண்டு வீசப்பட்டது.

இதில் 1 லட்சத்து 40 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பலியாயினர். அப்போது அமெரிக்க ஜனாதிபதியாக ஹென்றி ட்ரூமன் இருந்தார்.

இந்நிலையில் அவரது பேரன் கிளிப்டன் ட்ஷரூமன் டேனியல், நேற்று ஜப்பான் வந்தார். பின்னர் ஹிரோஷிமா அமைதிப்பூங்கா சென்று நினைவிடத்தில் மலரஞ்சலியும், மௌன அஞ்சலியும் செலுத்தினார்.

பின்னர் கூறுகையில், இது போன்ற ஒரு சம்பவம் இனி ஒரு போதும் நடக்கக் கூடாது. இது தான் நாம் ஹிரோஷிமாவில் உயிர் நீத்தவர்களுக்கு செய்யும் கடமை என்றார்.


மற்றொரு நகரமான நாகசாகி செல்கிறார். இங்கு இரண்டாவது அணு குண் டினை அமெரிக்கா வீசியது. இதில் 70 ஆயிரம் பேர் பலியாயினர் என்பது குறிப்பிடத்தக்கது.





ஒலிம்பிக் நீச்சல் இறுதி போட்டியை காண வருகை தந்த இங்கிலாந்து இளவரசர் வில்லியம் மற்றும் அவரது மனைவி கேட்.

## மொடல் அழகியால் வந்த வினை: பிரிட்டன் விஞ்ஞானி கைது



போதை கடத்தல் வழக்கில் பிரிட்டனைச் சேர்ந்த பிரபல விஞ்ஞானி பால் பிராம்டன் (வயது 68) அர்ஜெண்டினாவில் கைது செய்யப்பட்டு உள்ளார்.

இவர் கடந்த மார்ச் மாதம் அர்ஜெண்டினாவிலிருந்து பெரு நாட்டுக்குச் செல்வதற்காக பியூனஸ் அயர்ஸ் விமான நிலையத்தில் காத்திருந்தார்.

அப்போது அங்கு வந்த நபர் ஒருவர், பிரபல மொடல் அழகி டென்னிசி மிலானியிடம் பெட்டி ஒன்றை ஒப்படைக்கும்படி கொடுத்துள்ளார்.

இவரும் அந்த பெட்டியை எடுத்துச் சென்ற போது, விமான நிலைய அதிகாரிகள் அதை பரிசோதித்தனர். பெட்டியில், இரண்டு கிலோ கொகைன் என்ற போதைப் பொருள் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இதையடுத்து போதை கடத்தல் வழக்கில் பால் பிராம்டன் கைது செய்யப்பட்டு பியூனஸ் அயர்ஸ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். இவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் 16 ஆண்டு சிறை தண்டனை கிடைக்கும்.

பால் பிராம்டனுக்கு போதை கடத்தும் அளவுக்கு திறமை கிடையாது. அவர் கள்ளம் கபடமற்றவர். அவருடைய இந்த குணத்தை பயன்படுத்தி, போதை கடத்தும் கும்பல் சிக்க வைத்துள்ளது என இவரின் முன்னாள் மனைவி ஆனி மேரி தெரிவித்து உள்ளார்.

பால் பிராம்டன் இணையம் மூலம் செக் குடியரசை சேர்ந்த மொடல் அழகி டென்னிசி மிலானியுடன் தொடர்பு வைத்திருந்ததாக பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

வயதான ஆண்களைத் தான் எனக்கு பிடிக்கும் என டென்னிசி பால் பிராம்டனிடம் தெரிவித்துள்ளார். இதை நம்பி பால் பிராம்டன் டென்னிசியை சந்திக்க பொலிவியா சென்றுள்ளார்.

பிராம்டன் பெண் சபல புத்திக்காரர். அவர் ஏற்கனவே, இணையம் மூலம் சீன பெண்ணுடன் தொடர்பு கொண்டு, பின் அந்த பெண்ணை திருமணம் செய்து கொள்வதற்காக சீனா சென்றதாகவும், பொலிசார் தெரிவித்து உள்ளனர்.

## தொடர்ந்து இந்து கோயில்களுக்கு சேவை செய்வேன்: பாகிஸ்தான் நீதிபதி சபதம்

பாகிஸ்தான் உச்ச நீதிமன்ற நீதிபதி குர்ஷித் கான், இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்ட போது பொற்கோவிலில் பக்தர்களின் ஷூக்களை துடைத்தார் என்ற சர்ச்சை எழுந்தது.

இதற்கு பாகிஸ்தானில் கடும் எதிர்ப்பு கிளம்பியது. மேலும் குர்ஷித் கான் பதவி நீக்கப்பட் டார்.

இது குறித்து குரஷித் கான் கூறுகையில், இப்போது நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன். சுதந்திர மனிதனாகி விட்டேன். காலை 8 மணியில் இருந்து மாலை 5 வரை கடினமான பணியில் இருந்து விடுவித்துள்ளனர்.

இனி உலகம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து சீக்கிய, இந்து கோயில்களில் சேவை செய்வேன். மத நல்லிணக்கம், உலக அமைதி வேண்டி இதை செய்வேன்.

எனக்கு சர்க்கரை நோய் உள்ளது. ரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுப்பாட்டுக்குள் வைத்து கொள்ள கடந்த 10 ஆண்டுகளாக நிறைய இன்சுலின் எடுத்துக் கொண்டேன்.

ஆனால் சேவை புரிய தொடங்கியவுடன் சர்க்கரை அளவு படிப்படியாக குறைந்து விட்டது. கடந்த 3 ஆண்டுகளாக நான் இன்சுலின் எடுத்துக் கொள்வதில்லை.

சீக்கிய, இந்து கோயில்களில் நான் சேவை புரிவதற்கு தீவிரவாதிகள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். என் உயிரை பற்றி நான் கவலைப் படவில்லை. வத்திக்கான் நகருக்கு சென்று போப் பெனடிற்றுக்கும் சேவை செய்வேன்.

தீவிரவாத குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டு அமெரிக்க சிறையில் உள்ள ஆபியா சித்திக்கை விடுவிக்க முயற்சி மேற்கொள்வேன்.

அவர் விடுதலையானால் அமெரிக்கா மீது பாகிஸ்தான் மக்களுக்கு உள்ள தவறான எண்ணம் மாறும். அதன் மூலம் இரு நாட்டு உறவு மேம்படும் என்று தெரிவித்துள்ளார்.

# யாத்திரை செல்லும் இந்துக்களுக்கு மானியம்:

## தமிழக முதல்வர்



புனித யாத்திரையின் அடிப்படையில் சீனா, நேபாள கோவில்களுக்கு பயணம் மேற்கொள்ளும் இந்துக்களுக்கு ஆண்டுதோறும் அரசு மானியம் வழங்க தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் உள்ள இந்துக்கள் சீனாவில் உள்ள மானசரோவர் மற்றும் 108 வைணவ திருத்தலங்களில் ஒன்றான நேபாள நாட்டிலுள்ள முக்திநாத் ஆகிய இடங்களுக்கு புனித யாத்திரை மேற்கொள்ள இந்த உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

இது குறித்து தமிழக அரசின் அறிக்கையில், மானசரோவர் புனித யாத்திரைக்கு செல்ல இந்திய வெளியுறவுத் துறையால் தெரிவு செய்யப்படும் தமிழ் நாட்டை சேர்ந்த 250 இந்துக்களுக்கும், முக்திநாத்துக்கு செல்லும் 250 பேருக்கும் இந்த மானியம் வழங்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

மேலும் இந்த திட்டத்திற்காக 2012-2013ஆம் ஆண்டில் மானசரோவர் புனித பயணத்திற்கு சென்னையில் இருந்து விமானம் மூலம் சென்று வர ஒரு நபருக்கு ஆகும் மொத்த உத்தேச செலவான ஒரு இலட்சம் ரூபாயில் ரூ.40 ஆயிரம் வீதம் 250 பேருக்கு ரூ. 1 கோடி வழங்கப்படும்.

முக்திநாத்துக்கு சென்னையில் இருந்து இரயில் மூலம் சென்று வர ஒரு நபருக்கு ஆகும் உத்தேச செலவான ரூ. 25 ஆயிரத்தில் ரூ.10 ஆயிரம் வீதம் 250 பேருக்கு ரூ. 25 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இந்த யாத்திரைக்கான அரசு மானியம் பெறும் பயனாளிகளை தெரிவு செய்ய ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதிக்குள் இந்து சமய அற நிலையத்துறையால் நாளிதழில் விளம்பரம் செய்யப்படும்.

இதற்கு வரப்பெற்ற விண்ணப்பங்களை பரிசீலனை செய்து தகுதியான பயனாளிகளை விதிகளுக்கு உட்பட்டு தெரிவு செய்யும் பணியை இந்து சமய அற நிலையத்துறை மேற்கொள்ளும் என்று முதல்வர் இன்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கூடங்குளத்தில் மின் உற்பத்தி விரைவில் தொடங்கும்

## அமைச்சர் நாராயணசாமி தகவல்

தமிழ்நாட்டின் கூடங்குளத்தில் உள்ள அணுமின் நிலையத்தின் பணிகள் முழுவதும் முடிவடைந்து விட்ட நிலையில் வரும் 25ம் திகதி மின் உற்பத்தி தொடங்கும் என மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி கூறியுள்ளார்.

இது குறித்து அவர் அளித்த பேட்டியில், தமிழ்நாட்டில் மின்சார தட்டுப்பாடு நிலவி வரும் விடயம் மத்திய அரசிற்கு தெரியும்.

இந்நிலையில் கூடங்குள அணுமின் நிலையத்தில் பணிகள் அனைத்தும் நிறைவு பெற்றுவிட்டதையடுத்து மின் உற்பத்திக்கான பணிகள் வரும் 25ஆம் திகதி தொடங்குகின்றது. உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மத்திய தொகுப்புக்கு அனுப்பப்பட்டதுடன் அதை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் விரைவாக செயற்படுத்தப்படும்.

ஒருவேளை, கூடங்குள அணுமின் நிலையத்தில் ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் இழப்பீடு தொகையாக ரூ.1500 கோடியை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. 3,4 அணுமின் உலைகளில் ஏதேனும் அசம்பாவிதங்கள் ஏற்படுமாயின் அதற்கு ரஷ்யா நாடே பொறுப்பு என்றார்.

இந்த அணுமின் நிலையத்தை தொடங்கக்கூடாதென வலியுறுத்தி அப்பகுதி மக்கள் கடந்த ஆண்டு மிகப்பெரிய போராட்டத்தை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மரணித்த அனாதை விதவைகளை வெட்டி புதைக்கும் கொடூரம்

## உச்ச நீதிமன்றம் கண்டனம்



மரணமடைந்த அனாதை விதவைகளை முறைப்படி அடக்கம் செய்யாமல் அவர்களை வெட்டி புதைக்கும் செயலுக்கு உச்ச நீதிமன்றம் தனது எதிர்ப்புடன் கடும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளது.

உத்திரபிரதேச மாநிலத்தில் உள்ள அனாதை விடுதிகளில் தங்கியிருக்கும் விதவைப்பெண்கள் மரணித்தவுடன் அவர்களை முறைப்படி அடக்கம் செய்வதில்லை.

இது குறித்து தேசிய சட்டமைய அமைப்பின் சார்பில் பொது நலன் வழக்குத் தொடரப்பட்டது.

இந்த வழக்கின் மனுவில், உத்திரபிரதேச மாநிலம் மதுரா அருகே விரிந்தாவன் என்ற இடத்தில் அரசு அனாதை விடுதிகளில் முறைப்படி இறுதிச் சடங்கு செய்வதில்லை என்றும் இதற்கு அரசு போதுமான நிதி ஒதுக்கீடு வழங்குவதில்லை எனவும் கூறப்பட்டிக்கிறது.

இதனால் இறந்த விதவைகளின் உடல்களை துண்டு துண்டாக வெட்டி சாக்கு பைகளில் போட்டு அப்புறப்படுத்தும் நிலை உள்ளதாகவும் அம்மனுவில் கூறப்பட்டிருந்தது.

இம்மனுவை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் டி.கே. ஜெயின், மதன் லோகூர் ஆகியோர் விசாரித்து தீர்ப்பு வழங்கினர்.

இது குறித்த தீர்ப்பில், விதவைகள் இறந்ததும் அவரது உடல்களை உரிய மரியாதையுடன் அவர்கள் சார்ந்த மத வழக்கப்படி இறுதிச் சடங்குகள் செய்து அடக்கம் செய்ய வேண்டும்.

அனாதை விடுதிகளில் நடந்த சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது. மதுரா மருத்துவமனை முதன்மை மருத்துவ அதிகாரி, அனாதை விடுதிகளில் இறக்கும் விதவைகளின் உடல்களை உரிய மத வழக்கப்படி அடக்கம் செய்யப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்றனர்.

## வட மாநிலங்களில் கனமழை:

# குழந்தைகள் உட்பட 10 பேர் பலி, 38 பேர் மாயம்

இந்தியாவின் வட மாநிலங்களான உத்தரப்பிரதேசம், இமாச்சலய பிரதேசம், ஜம்மு-காஷ்மீரில் பெய்து வரும் கனமழையால் அம்மாநில மக்கள் பெரிதும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி 10 பேர் இறந்துள்ளனர்.

சமோலி மாவட்டத்தில் உள்ள கர்ணபிரயாக் பகுதியில் நேற்று பெய்த கனமழையால் வீடு இடிந்து விழுந்ததில் 2 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தனர். இதே மாவட்டத்தில் உள்ள போக்ரி பகுதியில் ஒரு குழந்தை வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டு இறந்தது.


உத்தரகாண்ட் மாவட்டங்களின் பல பகுதிகளிலும் தொடர்ந்து நிலச்சரிவுகள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் பத்ரிநாத் செல்லும் நெடுஞ்சாலைகள் தடைப்பட்டுள்ளன.

பத்ரிநாத் யாத்திரை மேற்கொண்டுள்ள நூற்றுக்கணக்கான பக்தர்கள் அங்கு செல்ல இயலாமல் பாதாளகங்கை, லம்பாகர், பிராகி ஆகிய இடங்களில் தங்கியுள்ளனர்.

கங்கோத்ரி பகுதியில் பாகீரதி நதி அபாய அளவைத் தாண்டிப் பெருக்கெடுத்து ஓடுகிறது.

# இந்திய செய்திகள்

## தமிழக மீனவர் டுபாயில் படுகொலை இழப்பீடு வழங்கியது அமெரிக்கா



தமிழக மீனவர் ஒருவரை துபாயில் சுட்டுக் கொலை செய்த சம்பவத்தில் அமெரிக்கா அம்மீனவரின் குடும்பத்திற்கு இழப்பீடாக ரூ.5 இலட்சம் வழங்கியுள்ளது.

கடந்த யூலை மாதம் துபாய் அரேபியா வளைகுடாவில் மீன் பிடித்துக்கொண்டிருந்த போது மீனவர் சேகர் உட்பட சிலரின் மீது அமெரிக்க மாலுமிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

இதில் மீனவர் சேகர் உயிரிழந்தார். மற்றவர்கள் படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு தற்போது துபாயில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சுட்டுக்கொல்லப்பட்ட சேகர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர் என்பதால் அவரது உடல் சமீபத்தில் தமிழகம் வந்தது. உடலை குடும்பத்தினர் பெற்றுக் கொண்டு அடக்கம் செய்தனர்.

மேலும் தமிழக அரசின் சார்பில் அவரது குடும்பத்திற்கு ரூ.5 இலட்சம் இழப்பீடாக வழங்கப்பட்டது. மேலும் அமெரிக்காவிடமிருந்தும் தங்களுக்கு இழப்பீடு வாங்கித்தரும்படி தமிழக அரசை சேகர் குடும்பத்தினர் வலியுறுத்தி வந்தனர்.

இந்நிலையில் இந்திய தூதரகம் மூலம் தமிழக அரசு முயற்சி மேற்கொண்டு அமெரிக்காவிடமிருந்து ரூ.5 இலட்சத்தை இழப்பீடாக வாங்கித் தந்துள்ளது.



அளவுக்கு அதிகமாக வைக்கோலை ஏற்றிச் செல்லும் மினி லொறி. இடம்: திருச்சூழி.

## வெடிகுண்டு பார்சலை கொண்டு வந்த மர்ம மனிதனை கண்டுபிடித்தால் ரூ.10,000 பரிசு

மதுரையில் பார்சல் வெடிகுண்டை கொண்டு வந்த மர்ம மனிதனை கண்டுபிடித்து தகவல் தெரிவிப்பவருக்கு ரூ.10,000 சன்மானம் அளிக்கப்படுமென மாவட்ட காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

மதுரையில் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வரும் உமர் பஷரூக் என்பவருக்கு நேற்று முன் தினம் இரவு பார்சல் ஒன்று வந்தது.

25 வயது மதிக்கத்தக்க இளைஞன் இரண்டு அட்டைப் பெட்டிகளை உமரின் கடைக்கு எதிரில் நகைப் பட்டறை வைத்திருக்கும் ஆறுமுகம் என்பவரிடம் கொடுத்து, அதை உமரிடம் கொடுக்குமாறு கூறி சென்றிருக்கிறார்.

உமர் பஷரூக்கின் மேலாளரான முகமது இஸ்மாயில், அந்தப் பார்சலை திறந்து பார்த்தபோது, அதனுள் குறிப்பிட்ட நேரத்தில் வெடிக்கும் வெடிகுண்டும், வெடி மருந்து பொருட்களும் இருந்துள்ளது.

மேலாளர் கொடுத்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறையினர் வெடிகுண்டை செயலிழக்கச் செய்தனர். உமர் பஷரூக், 2001ஆம் ஆண்டு அல்-உம்மா இயக்கத்தில் இணைந்து செயல்பட்டவர் என்று கருதுவதால், உமர் பஷரூக்கிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், வெடிகுண்டு பார்சல் கொண்டு வந்த மர்ம மனிதனின் உருவப்படத்தை மதுரை பொலிஸார் நேற்றிரவு வெளியிட்டனர்.

குஜராத் முதல்வர் நரேந்திர மோடி சௌராஷ்ட்ரா சமூகத்தினரின் மாநில மாநாடு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக மதுரை வருவதாக இருந்தது. அவரது வருகைக்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் வெடிகுண்டு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால், பொலிஸார் அந்த கோணத்தில் விசாரித்து வருகின்றனர்.

## ஒலிம்பிக் தொடக்க விழாவில் பங்கேற்ற பெங்களூர் பெண் மன்னிப்பு கோரினார்

லண்டனில் நடைபெற்று வரும் ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க விழாவில் இந்திய அணி, அணி வகுத்து சென்ற போது பெங்களூரை சேர்ந்த மதுரா நாகேந்திரா என்ற பெண்ணும் உடன் சென்றார்.

இந்த சம்பவத்துக்கு இந்திய அணியினர் கடும் கண்டனம் தெரிவித்ததுடன் ஒலிம்பிக் ஆணைக்குழுவிற்கு கடிதம் அனுப்பினர்.

எனவே நடந்த சம்பவத்திற்கு லண்டன் ஒலிம்பிக் ஆணைக்குழு வருத்தம் தெரிவித்தது.

இந்நிலையில் லண்டனிலிருந்து பெங்களூர் திரும்பிய மதுரா நாகேந்திரா தன்னுடைய இந்த செயலுக்கு மிகுந்த வருத்தம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில்: இந்திய மக்களின் உணர்வை நான் காயப்படுத்தி விட்டேன். எனது தவறை நான்உணர்ந்து விட்டேன்.என்று கூறினார்.

# ருவென்ரி-20 உலகக்கிண்ண ரிக்கெற்றுக்கள் விற்றுத் தீர்ந்தன

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி-20 தொடரின் இறுதிப்போட்டிக்கான நுழைவுச்சீட்டுக்கள் விற்று முடிக்கப்பட்டுள்ளதாக சர்வதேசக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. எனினும் ஏனைய போட்டிகளுக்கான நுழைவுசீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் சர்வதேசக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இறுதிப்போட்டிக்கான நுழைவுச்சீட்டுக்கள் அனைத்தும் விற்று முடிந்ததை மகிழ்ச்சியுடன் அறியத் தருவதாகத் தெரிவித்துள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபை, மூன்றாவது கட்ட நுழைவுச்சீட்டுக்கள் விற்பனை செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்பே அவை விற்று முடிந்துள்ளதாக அறிவித்துள்ளது.

ஏனைய போட்டிகளுக்கான நுழைவுச்சீட்டுக்களுக்கு பலத்த கேள்வி நிலவுவதன் காரணமாக நுழைவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ள விரும்பும் ரசிகர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் சர்வதேசக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

சுப்பர் 8 போட்டிகள் மற்றும் 2 அரையிறுதிப் போட்டிகளுக்கான நுழைவுச்சீட்டுக்களுக்கு பலத்த கேள்வி நிலவுவதாக அறிவித்துள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபை, நுழைவுச்சீட்டுக்களுக்கு கிடைத்துள்ள கேள்வி குறித்து மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்துள்ளது.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலக ருவென்ரி-20 தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் 18ஆம் திகதி முதல் கொழும்பு ஆர்.பிரேமதாச, பல்லேகல, அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது. பெண்களுக்கான போட்டிகள் காலியில் இடம்பெறவுள்ளன.

# யூ ரியூப்பில் ருவென்ரி - 20

ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் போட்டிகள் யூரியூப் இணையத்தளத்தில் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்படும் என இலங்கைக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. 24 போட்டிகளும் யூரியூப்பில் ஒளிபரப்புச் செய்யப்படும் என இலங்கைக் கிரிக்கெட் சபைத் தலைவர் உபாலி தர்மதாச உறுதி செய்தார்.

போட்டிகளை யூ ரியூப்பில் ஒளிபரப்புச் செய்வதற்கான திட்டத்தை எஸ்.எல்.பி.எல். போட்டிகளுக்கான விற்பனைப்படுத்தலுக்காக நியமிக்கப்பட்டுள்ள சமர்செட் என்ரெர்ரெய்ன்மென்ட் நிறுவனம் முன்மொழிந்ததாகவும், அதனைத் தாங்கள் ஏற்றுக் கொண்டதாகவும் இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைவர் உபாலி தர்மதாச தெரிவித்தார்.

யூ ரியூப்பில் ஒளிபரப்புச் செய்வதன் மூலம் பரந்துபட்ட கிரிக்கெட் ரசிகர்களை எஸ்.எல்.பி.எல். போட்டிகள் சென்றடையும் என எண்ணியதன் காரணமாகவே தாங்கள் அந்தத் திட்டத்தை ஏற்றுக் கொண்டதாக உபாலி தர்மதாச தெரிவித்தார். எஸ்.எல்.பி.எல். போட்டிகளுக்கான ஒளிபரப்பு உரிமையை இ. எஸ்.பி.என். ஸ்ரார் ஸ்போர்ட்ஸ் நிறுவனம் வென்றுள்ளதுடன் அந் நிறுவனம், இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் உட் பட சில நாடுகளில் ஒளிபரப்புச் செய்யவுள்ளது.

இலங்கைக் கிரிக்கெட் சபை முதன்முதலாக ஏற்பாடு செய்துள்ள ருவென்ரி-20 தொடரான ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பித்து 31ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

# அதிக எதிர்பார்ப்புக்களுடன் களம் இறங்குகிறேன்- சனத்



எஸ்.எல்.பி.எல். போட்டிகள் ஆரம்பிப்பதற்குக் காத்திருப்பதாக இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், முன்னாள் சகலதுறை நட்சத்திரமுமான சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார். எஸ்.எல்.பி.எல். போட்டிகள் ஆரம்பிக்கும் வரை காத்திருக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

இத்தொடர் முதலாவது தடவையாக இடம்பெறவுள்ள நிலையில் தனது ஆர்வம் அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவித்த சனத் ஜெயசூரிய, எஸ்.எல்.பி.எல். போட்டிகள் உள்ளூர் வீரர்களுக்கு அதிக வாய்ப்புக்களை வழங்குவதாக அமையும் எனத் தெரிவித்தார். உள்ளூர் வீரர்கள் - வெளி நாட்டு வீரர்களுடன் இணைந்து விளையாடுவதன் மூலம் உள்ளூர் வீரர்களுக்கு சிறப்பான அனுபவம் கிடைக்கப் பெறும் என அவர் தெரிவித்தார்.

இலங்கையில் அதிகளவிலான திறமைகள் காணப்படுவதன் காரணமாக எஸ்.எல்.பி.எல். போட்டிகள் வெற்றியடையும் எனத் தெரிவித்த அவர், இலங்கை சிறிய நாடான போதிலும், இலங்கையின் சிறந்த விளையாட்டுக் கட்டமைப்புக் காரணமாக சிறந்த வீரர்கள் பலரை இலங்கை உருவாக்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

# சிறந்த தடகள வீரர் தெரிவு

வலிகாமம்

வட மாகாண பாடசாலைகளின் மாவட்ட அணிகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்கள் பெண்களுக்கான தடகளப் போட்டிகளில் 15 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியைச்சேர்ந்த நாதன் சுமன் தடப் போட்டிகளில் 515 புள்ளிகளைப் பெற்று வட மாகாணத்தின் சிறந்த தடகள வீரனாக தெரிவு செய்யப்பட்டார்.

# ஐ.சி.சியின் மக்கள் தெரிவு விருதுக்கு சங்கக்காரவின் பெயர் பரிந்துரை



சர்வதேசக் கிரிக்கெட் வாரியத்தின் மக்கள் தெரிவு விருதுக்கான வீரர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். அறிவிக்கப்பட்டுள்ள 5 வீரர்களுள், இலங்கையின் குமார் சங்கக்காரவும் இந்தியாவின் சச்சின் டெண்டுல்கரும் உள்ளனர்.

சர்வதேசக் கிரிக்கெட் வாரியத்தின்(ஐ.சி.சி) மக்கள் தெரிவு விருது கடந்த 2010ம் ஆண்டு அறிமுகப் படுத்தப்பட்டது. இதில் 2010ம் ஆண்டு இந்தியாவின் சச்சின் டெண்டுல்கரும், கடந்த ஆண்டு இலங்கையின் குமார் சங்கக்காராவும் வென்றிருந்தனர்.

3ஆவது தடவையாக நடைபெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் வாரியத்தின்(ஐ.சி.சி) இவ்விருது வழங்கல் நிகழ்வில் இந்தியாவின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர், இலங்கையின் குமார் சங்கக்காரா, தென் ஆப்ரிக்காவின் வேர்ணன் பிலாந்தர், ஜக்யூஸ் கலிஸ் மற்றும் இங்கிலாந்தின் ஜேம்ஸ் அன்டர்சன் ஆகியோரது பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ள செய்திக் குறிப்பில், கிரிக்கெட் ரசிகர்கள் தங்களுக்கு விருப்பமாக கிரிக்கெட் நட்சத் திரத்தைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பை ஏற் படுத்துவதற்காக இந்த வசதியைக் கிரிக்கெட் ரசிகர்கள் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

மேலும் ஓகஸ்ட் 31ம் திகதி வரை வாக்களிக்கும் வாய்ப்பு ரசிகர்களுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் 15ம் திகதி கொழும்பில் நடைபெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் விருது வழங்கல் விழாவில் இவர் களில் ரசிகர்களால் தெரிவுசெய் யப்படுபவருக்கு விருது வழங்கப்படும் என்று சர்வதேசக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

வாக்களிக்க விரும்பும் ரசிகர்கள் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் பேஸ்புக் பக்கத்திற்குச் செல்வதன் மூலம் தங்கள் வாக்குகளை அளிக்கலாம். பேஸ்புக் முகவரி: www.facebook.com/cricketicc

# கடைசி போட்டியையும் இழந்தது இலங்கை



இலங்கைக்கு எதிரான 5-வது ஒருநாள் கிரிக்கெட் ஆட்டத்திலும் இந்தியா வென்றது. இதன் மூலம் ஒருநாள் தொடரை 4-1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

ஒருநாள் தரவரிசையில் 4-வது இடத்தில் இருந்த இந்தியா, இந்த வெற்றி மூலம் 2-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இந்த ஆட்டத்தில் முதலில் பேட் செய்த இந்தியா 50 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 294 ஓட்டங்கள் எடுத்தது. அடுத்து விளையாடிய இலங்கை 45.4 ஓவர்களில் 274 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

பல்லகெலேவில் சனிக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற தோனி முதலில் பேட்டிங் செய்யத் தீர்மானித்தார். அணியில் சேவாக்குக்கு பதிலாக ரஹானே களமிறங்கினார். உடல் தகுதி பிரச்னை காரணமாக சேவாக் விளையாடவில்லை.

கம்பீர், ரஹானே ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களமிறங்கினர். ரஹானே 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். அடுத்து கோலி களமிறங்கினார். கம்பீரும், கோலியும் நிதானமாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தனர்.

ஸ்கோர் 77 ஆக இருந்தபோது கோலி ஆட்டமிழந்தார். அவர் 35 பந்துகளில் 23 ரன்கள் எடுத்தார்.

அடுத்து வந்த ரோஹித் சர்மா 4 ஓட்டங்களே எடுத்து ஏமாற்றமளித்தார். இந்தத் தொடரில் அவர் எடுத்த ஓட்டங்கள் முறையே 5,0,0,4,4.

பின்னர் வந்த மனோஜ் திவாரி கம்பீருடன் இணைந்து ஸ்கோரை உயர்த்தினார். 38ஆவது ஓவரில் ஸ்கோர் 197 ஆக இருந்தபோது திவாரி ஆட்டமிழந்தார்.

அவர் 68 பந்துகளில் 65 ரன்கள் எடுத்தார். அடுத்து களமிறங்கிய ரெய்னா தான் எதிர் கொண்ட முதல் பந்திலேயே ரன் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்து, அதிர்ச்சி அளித்தார். பின்னர் வந்த கேப்டன் தோனி 2 பவுண்டரிகளை விளாசி அதிரடியாக ஆட்டத்தைத் தொடங்கினார். எனினும் சிறிது நேரத்திலேயே கம்பீர் 88 ஓட்டங்களில் (99 பந்துகள்) ஆட்டமிழந்தார். அடுத்து பதான், தோனியுடன் ஜோடி சேர்ந்தார். இந்த சூழ்நிலையில் விக்கெட் விழாமல் இருப்பது முக்கியம் என்பதை உணர்ந்த தோனி, அதிரடி ஆட்டத்தைக் கைவிட்டு நிதானமாக விளையாடி ரன் சேர்த்தார்.

எனினும் 40 ஓவர்களைக் கடந்த பின்னர் தோனி அதிரடி ஆட்டத்தில் ஈடுபட்டார். பெரெரா வீசிய 46-வது ஓவரில் தொடர்ந்து 3 பவுண்டரிகளை அவர் விளாசினார். இதனால் இந்திய அணி 300 ஓட்டங்களுக்கு மேல் எட்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும் தோனி ஆட்டமிழந்ததால் இந்திய அணி 300 ஓட்டங்களை எட்ட முடியவில்லை.

டோனி 38 பந்துகளில் 58 ரன்கள் எடுத்தார். இதில் 8 பவுண்டரிகளும், 1 சிக்ஸரும் அடங்கும். பதான் 29 ஓட்டங்களுடனும், அஸ்வின் 2 ஓட்டங்களுடனும் கடைசி வரை களத்தில் இருந்தனர்.

50 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 7 விக்கெட் இழப்புக்கு 294 ஓட்டங்கள் எடுத்தது. இலங்கை அணியில் மலிங்கா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

அடுத்து விளையாடிய இலங்கை அணியில் அதிகபட்ச மாக திரிமனே 77 ரன்களும், மெண்டிஸ் 72 ரன்களும் எடுத்தனர். 45.5 ஓவர்களில் 274 ஓட்டங்களுக்கு இலங்கை சுருண்டது.

இர்பான் பதான் அதிகபட்சமாக 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இலங்கைக்கு எதிரான தொடரை வென்ற இந்திய அணி, சர்வதேச தரவரிசையில் 2ஆவது இடத்துக்கு (119) முன்னேறியது.

முதலிடத்தில் ஆஸ்திரேலியா (119) தசம புள்ளி வித்தியாசத்தில் உள்ளது. அடுத்த 3 இடங்களில் தென்னாபிரிக்கா (118), இங்கிலாந்து (118), இலங்கை (110) அணிகள் உள்ளன.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 06.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது